


மேற்கண்ட ரிகார்டுகள் எங்களிடமும் கிடைக்கும்:

மெஸர்ஸ். குப்தா கார்ப்பொரேஷன்

தபால் பெட்டி நெ. 35, 17-A/428, அருணாசல ஆச்சாரி தெரு, சேலம்



ஏன் இப்படிக்
கஷ்டப்படவேண்டும்
Saridon
ஸாரிடோன்
எல்லா வலிகளையும்
பத்தே நிமிஷத்தில் நிறுத்துகிறது

இந்தியன் பாங்கி லிமிடெட்,

(ஸ்தாபிதம்: 1907)

1907ல் பாங்கி ஆரம்பமானது முதல் ஐந்து வருஷத்துக்கொருமுறை முன்னேற்றம்பற்றிய கணக்கு விவரம்

டிஸம்பருடன் முடிவடையும் வருஷம்	வாக்களிக்கப்பட்ட மூலதனம்			செலுத்தப்பட்ட மூலதனம்			ரிசர்வ் நிதி			நிகர லாபம்			டிபாஸிட்டுகள்			டிவிடெண்டு விகிதம்
	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.	
1911	20,00,000	0	0	10,00,000	0	0	75,000	0	0	92,265	2	6	23,74,643	14	6	6%
1916	20,00,000	0	0	10,00,000	0	0	2,50,000	0	0	1,31,495	0	3	32,38,689	9	0	7½%
1921	45,93,600	0	0	12,59,360	0	0	5,25,000	0	0	1,60,324	0	2	76,41,228	10	4	10½%
1926	47,92,300	0	0	12,79,230	0	0	7,00,000	0	0	1,26,139	4	3	1,13,65,837	2	7	9%
1931	47,92,800	0	0	12,79,280	0	0	12,00,000	0	0	2,46,404	4	0	1,72,67,934	10	1	12%
1936	47,92,800	0	0	12,79,280	0	0	13,00,000	0	0	2,39,057	10	2	2,98,85,593	10	5	10½%
1941	48,00,000	0	0	12,80,000	0	0	16,01,800	0	0	4,09,480	11	11	6,43,52,646	14	1	10%
1946	71,10,900	0	0	51,67,608	9	9	61,50,000	0	0	26,20,055	13	4	17,38,00,000	0	0	14%


1907ல் பாங்கி ஆரம்பமானது முதல் வருஷா வருஷம் அளிக்கப்படும் சராசரி டிவிடெண்டு விகிதம்-9.79%

(போர்டார் உத்திரவுப்படி)

என். கோபால அய்யர்,

காரியதரிசி.

இந்தப் பந்தயம் எப்படி?



சென்னை மந்திரி சபை குதிரைப் பந்தயத்தை ஒழிக்கும் நல்ல தீர்மானத்தைச் செய்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால், ஒரு வேளை குதிரைப் பந்தயத்துக்குப் பதிலாக இம்மாதிரி மனிதப் பந்தயத்தை ஏற்படுத்துவார்களோ என்ற சந்தேகமும் ஏற்பட்டிருக்கிறது.

கல்கி
பொருளடக்கம்

மலர் 6 இதழ் 27 | 1947 பிப்ரவரி 2 | வியய தை 20

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

ஜகன்மாதாவிடம் ஞானப்பால் உண்டு வளர்ந்து தேனினும் இனிய தமிழில் தேவாரப் பாடல்களைப் பொழிந்த ஞானசம்பந்தர் அவதரித்த ஸ்தலம் சீகாழி. நீர்வளமும் நில வளமும் கொழிக்கும் அந்தப் புண்ணிய ஸ்தலம் சென்ற 1945-ம் ஆண்டில் தமிழ் நாட்டுத் தேச பக்தர்களுக்கு ஒரு முக்கிய ஸ்தலம் ஆயிற்று. "தேச நன்மைக்கு ராஜாஜி வேண்டும்" என்று கருதிய தேசபக்தர்கள் அங்கே கூடி ஆலோசித்துச் செய்த முயற்சியின் வரலாற்றை நேயர்கள் அறிவார்கள்.

அத்தகைய சீகாழி ஸ்தலத்திலுள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீ சட்டநாத ஸ்வாமி ஆலயம் சென்ற ஜனவரி 26ல் மந்திரி கோடி ரெட்டியாரின் தலைமையில் ஹரிஜனங்கள் உள்பட சகல ஜனங்களுக்கும் திறந்து விடப்பட்டது அறிந்து அளவற்ற மகிழ்ச்சியடைகிறோம். தூய்மையும் அழகும் வாய்ந்த மேற்படி ஆலயம் தருமபுரம் ஆதீனத்துக்கு உட்பட்டதாகும். தற்சமயம் தருமபுரம் மடாதிபதியாக விளங்கும் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் காந்திமகானுக்குப் பெரிதும் உகந்த இந்தத் திருத்தொண்டில் மற்ற மடாதிபதிகளுக்கெல்லாம் வழிகாட்டியிருக்கிறார் என்று சொல்வது மிகையாகாது. இன்னும் தருமபுரம் ஆதீனத்தைச் சேர்ந்த ஸ்ரீ வைத்தீசுவரன் கோயில், திருவையாறு முதலிய பிரபல ஆலயங்களிலும் விரைவில் திறப்புவிழா வைபவம் நடைபெறும் என்று அறிந்து மிகவும் மகிழ்கிறோம்.

*



*

கல்கி

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 27

என்ன சேதி?

பல்லாண்டு பல்லாண்டு

இரண்டு மாசங்களின் நடுவில் பள்ளி கொண்டிருக்கும் பெருமாளுக்கு நமது பல்லாண்டுகளை பிப்ரவரி 1உ. சனிக் கிழமை யன்று சமர்ப்பித்துக் கொள்ளு கிறோம். அன்றைய தினம் சென்னைக் கவர்னர் துரையின் ஸ்வஹஸ்த லிகிதக் கையொப்பம் பெற்ற உத்தரவு விசேஷத் தினால், ஸ்ரீரங்கநாதரின் ஆலயத் திறப்பு வைபவம் மறுபடியும் தள்ளிப்போடப் படா மலும், மிளகாய்ப்பொடி விபத்து முதலி யவை இல்லாமலும் நிச்சயமாக நடை பெறும் என்று நம்புகிறோம். அன்றைய தினம் பதினாயிரக் கணக்கான திருப்பாணாழ் வார்களும் மற்றுமுள்ள பக்தகோடிகளும் ஆலயத்திற்குள்ளே பிரவேசித்து அரங் கனைச் சேவிப்பார்கள் என்று எதிர்பார்க் கிறோம். 'பக்த கோடிகள்' என்று மேலே நாம் குறிப்பிட்டிருப்பது கொஞ்சம் மிகை யாக இருந்த போதிலும், 'பக்த கோடி' என்பதாவது நிச்சயம் உண்மை யாகும் படியாக மந்திரிமார்கள் பக்தவத்ஸலமும் கோடி ரெட்டியும் அவசியம் விஜயம் செய்து ஸ்ரீ ரங்கநாதரைக் கௌரவப் படுத்துவார்கள் என்று உறுதியான நம் பிக்கை கொண்டிருக்கிறோம்.

மற்றொரு மகா கௌரவம்

பிரகாசம் மந்திரி சபை பதவி யேற்ற பிறகு சென்னைக்கு எத்தனையோ கௌர வங்கள் கிடைத்திருக்கின்றன. இப்போது காங்கிரஸ் மாகாணங்களுக்குள்ளே முதன் முதலாக அவசர ஆள் தூக்கிச் சட் டத்தைப் பிறப்பித்து அதன் கீழ் நட வடிக்கை எடுக்கும் மகா கௌரவமும் கிடைத்திருக்கிறது. யுத்த காலத்தில் அதிகார வர்க்கத்தார் பிறப்பித்த 'பாது காப்புச் சட்ட'ங்களின் கடுமையான ஷரத் துக்களை யெல்லாம் சேர்த்துப் பிரகாசம் சர்க்கார் மேற்படி அவசரச் சட்டத்தைப் பிறப்பித்திருக்கிறார்கள். பிறப்பித்த உடனே மேற்படி சட்டத்தைப் பிரயோ கித்து, சென்னை மாகாணத்தைச் சேர்ந்த பொது உடைமைக் கட்சியினர் பலரை வாரண்டு இல்லாமல் பிடித்து விசாரணை இல்லாமல் சிறைக்கு அனுப்பி யிருக் கிறார்கள். மேற்படி நடவடிக்கைகளில் பழைய அதிகார வர்க்க சர்க்காரைக் காட் டிலும் காங்கிரஸ் சர்க்கார் அதிக தீவிர மாகவே காரியம் செய்திருக்கிறார்கள்.

பழைய அதிகாரவர்க்க அரசை அவ்வளவு ஊராகப் பின்பற்றுவதற்கு என்ன அவசியம் நேர்ந்தது, தேசத்தின் பாதுகாப்புக்கு அப்படி யென்ன பிரமாதமான ஆபத்து வந்தது என்பதைப் பற்றிப் பிரதம மந்திரி பிரகாசம்காரு சட்டசபையில் விவரமாகச் சொல்லி யிருக்கிறார்; மேலும் சொல்லப் போகிறார். நம்முடைய அபிப்பிராயத்தை நாமும் சொல்லி வைப்போம்.

பொது உடைமைப் போக்கு

சில காலமாகப் பொது உடைமைக் கட்சியாரின் போக்கை நாம் ஆதரிக்க முடிய வில்லை யென்பதை முதலில் சொல்லிவிடு கிறோம். மாகாணங்களில் காங்கிரஸ் அர சாங்கமும், டில்லியில் தேசிய சர்க்காரும் ஏற்பட்ட பிறகு பொதுஉடைமைக் கட்சி யார் தங்களுடைய காரியத் திட்டங்களை யும் பிரசார முறையையும் மாற்றி யிருக்க வேண்டும். பழைய அதிகாரவர்க்க சர்க் காரை எதிர்த்த தீட்சண்யத்துடனேயே காங்கிரஸ் சர்க்காரை அவர்கள் எதிர்த்து வந்தது முறையாகாது. புது டில்லியில்

தேசிய சர்க்கார் ஏற்பட்டவுடனே தென்னிந்திய ரயில் வேலை நிறுத்தம் செய்தது சென்னைப் பொதுஉடைமைக் கட்சியின் மாபெருந் தவறாகும்.

அதற்குப் பிறகு, நாட்டில் உணவுப்பஞ்சம் தீவிரமாக இருக்கும் சமயத்தில், விவசாய வளர்ச்சியைத் தடை செய்யும் முறையில் அவர்கள் கிஸான் கிளர்ச்சியை நடத்தி வருகிறார்கள். தக்க முறையில் கிளர்ச்சி செய்து சட்டசபை மூலமாக நிறைவேற்றக் கூடிய காரியங்களுக்கெல்லாம் விவசாயத் தொழிலாளிகளை கோடி நடவடிக்கைகளைக் கையாளும்படி தூண்டி வருகிறார்கள். இதனால் பெரும்பாலான நன்செய் பிரதேசங்களில் முற்றிய நெற்பயிர் அறுவடையாகாமல் கிடந்து நாட்டுக்கே பெரு நஷ்டம் ஏற்பட்டு வருகிறது.

இவ்வளவையும் நாம் இப்போது சொல்வது எதற்காக வென்றால், சென்னைப் பொது உடைமைக் கட்சியின் தற்போதைய காரியங்களை நாம் கொஞ்சமும் விரும்பவில்லை யென்றும், அக்கட்சியாரிடம் நமக்கு விசேஷ அபிமானம் ஒன்றும் இல்லை என்றும் காட்டுவதற்காகத்தான்.

ஆனாலும் மகா மோசம்!

பொது உடைமைக் கட்சியின் போக்கைப் பற்றி நமது அபிப்பிராயம் இப்படியிருந்தபோதிலும், பிரகாசம் சர்க்கார் அவர்களை அடக்குவதற்காக அவசர ஆள் தூக்கிச் சட்டத்தைப் பிரயோகித்தது மகா மோசமான காரியம் என்று வற்புறுத்திச் சொல்கிறோம். மாபெரும் யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது, ஜப்பானியப் படையெடுப்பு எந்த நிமிஷமும் எதிர்பார்க்கப் பட்டபோது, பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் பாதுகாப்புச் சட்டத்தைப் பிரயோகித்ததையே காங்கிரஸ்வாதிகள் பலமாகக் கண்டித்திருக்கிறார்கள். அப்படி யிருக்க, இப்போது தேசத்தின் பாதுகாப்புக்கு அவ்வளவு பெரிய அபாயம் என்ன வந்து விட்டது? வாரண்ட் இல்லாமலும், விசாரணை யில்லாமலும் கைது செய்து சிறையிலடைக்கும்படி என்ன அவசியம் நேர்ந்து விட்டது? பொது உடைமைக் கட்சிக்காரர் என்னதான் பிரமாதமான பயங்கர பலாத்காரக் காரியங்களைத் தூண்டி விட்டு வந்த போதிலும், அவர்களைத் தடுப்பதற்கு நாட்டிலுள்ள சாதாரண கிரிமினல் சட்டங்கள் நிச்சயமாய்ப் போதும் என்று நாம் கருதுகிறோம். போதவில்லை யென்று சொன்னால், அரசாங்க நிர்வாகத்தை வகிப்பவர்களுக்கு அதற்கு வேண்டிய திறமை இல்லை யென்று தான் ஏற்படும்.

"ஜீவாதார உரிமை"யைப் பற்றி வருஷக் கணக்காக வாய் கிழியக் கத்திக் கொண்டிருந்தவர்கள் அதிகாரத்துக்கு வந்ததும் அந்த ஜீவாதார உரிமைகளுக்கு உலை வைப்பது ஒரு நாளும் நியாயமாகாது. காங்கிரஸ் மகாசபைக்கே சென்னை சர்க்காரின் இந்தக் காரியத்தினால் அபகீர்த்தி ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

ஆங்ஸானுக்கு வெற்றி

சென்ற பத்துப் பதினைந்து நாளாக பர்மியத் தலைவர்களுக்கும் பிரிட்டிஷ் மந்திரி சபைக்கு மிடையே நடந்துவந்த பேச்சு வார்த்தைகள் ஒரு வகையாக முடிந்து, பிரிட்டிஷ் சர்க்கார் பர்மா அரசியலைப் பற்றி ஓர் அறிக்கையும் வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கையை அப்படியே வைத்துக்கொண்டு பார்த்தால் பர்மியத் தலைவர் மேஜர் ஜெனரல் ஆங்ஸானுக்குப் பூரண வெற்றி கிடைத்திருக்கிறதென்றே சொல்ல வேண்டும். மேற்படி அறிக்கையின் முக்கியமான இரண்டு அம்சங்கள் பின்வருமாறு:—

(1) பர்மா தன்னுடைய அரசியலைத் தானே வகுத்துக் கொள்ளுவதற்காக ஏப்ரல் மாதத்துக்குள் ஒரு அரசியல் நிர்ணய சபையை ஏற்படுத்திக் கொள்ளும். அரசியல் நிர்ணய சபைப் பிரதிநிதிகளைப் பர்மியப் பொது மக்கள் தேர்ந்தெடுப்பார்கள்.

(2) புதிய சுதந்தர அரசியல் திட்டம் ஏற்படும் வரையில் தற்போதுள்ள பர்மா மந்திரி சபையார் எல்லா அதிகாரங்களையும் வகித்து ஆட்சி நடத்துவார்கள்.

எனவே, வாய் வார்த்தையையும் கடிதாசியையும் பொறுத்த வரையில், பிரிட்டிஷ் சர்க்கார் பர்மாவின் சுதந்திரக் கோரிக்கையைப் பூரணமாக ஒப்புக்கொண்டு விட்டார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் காரியத்தில் எப்படி நிறைவேற்றி வைக்கப் போகிறார்கள் என்பதை இனிமேல்தான் பார்க்கவேண்டும். ஏனெனில், பிரிட்டிஷ் மந்திரிகள் இந்தியாவுக்கும் அத்தகைய அரசியல் திட்டத்தைத்தான் கொடுத்தார்கள். பிறகு, அந்த திட்டத்தைக்

குழப்பி, கிளிவுத்துக்கு ஒரு வியாக்யானம் சொல்லி, அரசியல் சிக்கலை இன்னும் அதிகமாக ஆக்கி வருகிறார்கள். அப்படிக்கின்றி, பர்மா விஷயத்தில் பிரிட்டன் சொன்ன வார்த்தையை ஒழுங்காக நிறைவேற்றி வைத்தால், பர்மா விரைவில் பூரண சுதந்திரம் அடைந்து விடும். ஜெனரல் ஆங்ஸான் இன்னொரு சுதந்திரப் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டிய அவசியம் இராது. பர்மாவில் அவருடைய தலைமையை விரும்பாதவர்கள் நடத்தும் குட்டிக் கலகங்களுடனேதான் அவர் மல்லுக்கு நிற்கவேண்டியிருக்கும்.

பஞ்சாபில் பூகம்பம்

பஞ்சாப நாட்டில் ஒரு மாபெரும் அரசியல் பூகம்பம் ஏற்பட்டு அமர்க்களப் பட்டு வருகிறது. அந்த மாகாணத்தின் கூட்டு மந்திரி சபையை எப்படியாவது கவிழ்த்துவிட வேண்டும் என்று முஸ்லிம் லீக் தலைவர்கள் சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பித்து அம் மாகாணத்தைக் கிடுகிடுக்கச் செய்திருக்கிறார்கள். பஞ்சாப் கூட்டு மந்திரி சபையார் மேற்படி பூகம்பத்தைச் சமாளிப்பதற்கு இன்றைக்கு ஓர் உத்தரவு போடுவதும், நாளைக்கு அதை மாற்றுவதும், மறுநாள் திருப்பி அதையே போடுவதுமாய்க் காரியத்தை நடத்திக் கொண்டு போகிறார்கள். மேற்படி பூகம்பத்தின் விளைவு முடிவில் என்ன ஆகப் போகிறது என்று தேசமெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறது; நாமும் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

நமது துணை ஆசிரியர்

நேதாஜி சுபாஷ் சந்திரரின் தலைமையில் ஆஸாத் ஹிந்த் (சுதந்திர இந்திய) அரசாங்கம் நடைபெற்ற போது மலாய் நாட்டில் வாழ்ந்த இந்தியர்கள் கொடுத்து வைத்தவர்கள். அவர்களில் நேதாஜி நடத்திய மகத்தான வீரப் போராட்டத்துக்கு எந்த விதத்திலேனும் துணை புரிந்தவர்கள் மிக்க பாக்கியசாலிகள். அத்தகைய பாக்கியசாலிகளில் ஒருவரும், "எரிமலை" என்னும் மாபெரும் நூலின் மொழிபெயர்ப்பு ஆசிரியருமான ஜயமணி ஸ்ரீ சுப்பிரமணியம் அவர்கள் நமது "கல்கி" பத்திரிகையின் துணை ஆசிரியராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதை நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். "ஆஸாத் ஹிந்த்" அரசாங்கம் நடந்த காலத்தில் ஜயமணி சுப்பிரமணியம் அவர்களுக்கு நேதாஜி எழுதிய ஆங்கிலக் கடிதத்தைக் கீழே காணலாம். அமர வாழ்வு அடைந்த ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸின் கையெழுத்துக்கூட எவ்வளவு அழகாயிருக்கிறது!

Sri Jayamani S. Subrahmanyam,
c/o. Manonmoney Vilas Book Depot.
Booksellers and Publishers,
Kuala Lumpur.

"JAI HIND"

Many thanks for presenting me a copy of the book, "The First War of Indian Independence" by Savarkar.


You have done a service to our Cause by reprinting this book at a time when it is most needed.

With sincerest good wishes,

"JAI HIND"

Subhas Chandra Bose

அனுபவ போதனை



லண்டனுக்குச் சென்ற பர்மாப் பிரதிநிதிகள் பிரிட்டிஷ் மந்திரிகளிடம் சுதந்தர வாக்குறுதி பெற்று வெற்றியுடன் திரும்பியிருக்கிறார்கள். [redacted] இருப்பது நல்லது என்பதை இந்தியாவின் அனுபவம் போதனை செய்கிறது.

முட்டுக்கட்டை விழா

பிரிட்டிஷார் இருக்கிறார்களே, அவர்கள் மகா கெட்டிக்காரர்கள். ஐம்பது அல்லது நூறு வருஷங்களுக்குப் பிறகு என்ன நேரக் கூடுமென்பதை யுணர்ந்து, அதைச் சமாளிப்பதற்குரிய திட்டத்தை முன் கூட்டியே வகுக்கும் ஆற்றல் படைத்தவர்கள்.

இந்தியாவில் சுதந்திர உணர்ச்சி பிரவாக மெடுத்து ஓடும் காலம் வருமென்பதையும், அப்போது தாங்கள் தங்களுடைய மூட்டை முடிச்சுகளுடன் தங்கள் ஊருக்கு ஓட நேருமென்பதையும் பிரிட்டிஷார் பல பல வருஷங்களுக்கு முன்பே அறிவர். இருந்தாலும் காலச் சக்கரத்தின் அத்தகைய போக்கைக் கூடிய வரையில் தடுத்து வருவதற்காகவே, அவர்கள் ஏராளமான முட்டுக்கட்டைகளைச் சிருஷ்டித்தனர்.

அவற்றில் பெரும்பாலானவையும், நம் தலைவர் திலகங்களின் தியாகத்தினாலும் ஜனங்களின் உறுதியினாலும் நாளடைவில் நொறுக்கப்பட்டுத் தவிடு பொடியாகி விட்டன. இரண்டொன்று மாத்திரம் பரந்த கண்டமாகிற ஆல விருக்ஷத்தின் மீது புல்லுருவிகள் போன்று படர்ந்து இன்றும் தீராத் தொல்லையை விளைவித்து வருகின்றன.

அவற்றில் ஒன்று, பிரிட்டிஷாரின் பிரித்தாளும் தந்திரத்தினால் உருவாக்கப்பட்ட பாகிஸ்தான் கோஷ்டி.

மற்றொன்று மன்னர்களின் மண்டலம்.

இவ்விரு கோஷ்டிகளும் பிரிட்டிஷாரின் வேலையை, — அதாவது இந்திய சுதந்திரத்தை உருக்குலைக்கும் கைங்கரியத்தை, பிரிட்டிஷாரைக் காட்டிலும் திறமையுடன் செய்து வருகின்றன வென்பதை நாம் ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டும்.

* * *

இவ்வுலகில் ஐந்தாம் படை வேலையை முதன் முதலாகக் கண்டு பிடித்தவர் அடால்ப் ஹிட்லர்தானென்று பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அந்தப் பெருமை பிரிட்டிஷாருக்கே உரியது.

ஹிட்லர் பிறப்பதற்கு முன்பே பிரிட்டிஷார் அந்த வேலையில் அபாரமான தேர்ச்சி பெற்று விட்டனர்! இந்தியாவிலுள்ள சமஸ்தான மன்னர்கள் பிரிட்டிஷாரின் ஐந்தாம் படையாட்களே என்று ஒரு பிரபல எழுத்தாளர் குறிப்பிட்டிருப்பது மேற்படி உண்மையை விளக்கப் போதுமானது.

எனினும் ஹிட்லரின் ஐந்தாம் படைகள் இன்று இருக்குமிடந் தெரியவில்லை. ஆனால், பிரிட்டிஷாரால் சிருஷ்டிக்கப்பட்ட ஐந்தாம் படைகளோ, இன்றும்கூட இந்தியாவில் வெகு ஜோராகத் தங்களுடைய 'கடமைகளை'ச் செய்து வருகின்றன.

பிரிட்டிஷார் இந்தியாவில் காலடி வைத்த சில ஆண்டுகளுக்குப் பின், இந்தியாவிலிருந்த சிற்றரசர்களையெல்லாம் ஒவ்வொருவராக ஒழித்து அவர்களின் ராஜ்யத்தைக் கைப்பற்ற முற்பட்டார்கள். பின்னர்தான் அவர்களுக்கு (பிரிட்டிஷாருக்கு) ஒரு யுக்தி தோன்றியது.

இந்திய சிற்றரசர்களை அடியோடு ஒழித்து விடுவதைக் காட்டிலும், அவர்களைத் தங்களுடைய பொம்மைகளாக வைத்துக் கொண்டு காரியத்தை நடத்துவதுதான் சிறந்த அரசியல் தந்திர மென்பதை பிரிட்டிஷார் உணர்ந்தனர். அதன் பின் அவர்களே புதிதாகச் சில சிற்றரசர்களையும் சிருஷ்டித்தார்கள்.

அதன் விளைவாகவே பிரிட்டிஷாருக்கும் சமஸ்தான மன்னர்களுக்கும் உடன்படிக்கைகள் ஏற்பட்டன. உடன்படிக்கைகளின் சார மென்னவெனில், பிரிட்டிஷாரின் பொம்மைகளாகவும் பக்கபலமாகவும் சமஸ்தான மன்னர்கள் இருந்து வரும் வரையில், அவர்களுடைய கொடுங்கோலாட்சியில் பிரிட்டிஷார் தலையிடுவதில்லையென்ற விசித்திரமான தத்துவம்தான்!

உலகில் எங்கேயாவது ஒரு மூலை முடுக்கில் ஜனநாயகத்துக்கு ஆபத்து ஏற்படும்போலிருந்தால் கூட, தங்களுடைய 'தெய்விக'க் கடமையைச் செலுத்தி ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காகத் துள்ளியெழும் பிரிட்டிஷார், சமஸ்தான மன்னர்களின் டம்பாச்சாரித்தனமான வாழ்க்கைக்கும் அக்கிரம ஆட்சி முறை

களுக்கும் அபயமளித்து வந்திருப்பது விசித்திரமே.

இந்தியாவின் சுதந்திரத்தை நசுக்கி, இந்தியாவை அடிமை நாடாக்கிய பிரிட்டிஷார், ஜனநாயகத்துக்காகப் போராடியதாய்ப் பறை சாற்றியதும், தங்களுடைய பிரதேசங்களில் ஜனநாயக வாடையையும் சகியாத இந்திய சமஸ்தான மன்னர்கள், உலகில் ஜனநாயகத்தை 'ரக்ஷிப்பதற்காக' பிரிட்டனுக்கு லட்சக்கணக்கில் ஆட்களையும், கோடிக்கணக்கில் தொகையையும் உதவியதும் அதைவிடப் பெரும் விசித்திரமேயாகும்.

சமஸ்தான ஜனங்களை ஆட்சி புரிவதற்குத் தங்களுக்குத் 'தெய்வீக' உரிமையுண்டென்று கூறும் மண்டலாதிபதிகள், தங்களை ஆட்சி புரிய பிரிட்டிஷ் ரெஸிடெண்டுகளுக்கும் 'தெய்வீக' உரிமையுண்டென்று கூற முன் வருவார்களா?

ஏனெனில், சமஸ்தானப் பிரஜைகளின் எஜமானர்கள் மன்னர்களாயினும், மன்னர்களின் உண்மையான எஜமானர்கள் பிரிட்டிஷ் ரெஸிடெண்டுகள்தான்!

ஸ்ரீ பத்மநாபஸ்வாமியே மகாராஜா மூலம் திருவாங்கூர் சமஸ்தான மகா ஜனங்களை ஆட்சி புரிகிறாரென்று ஸர் சி. பி. ராமஸ்வாமி ஐயர் சமீபத்தில் ஓர் 'உருக்கமான' அறிக்கை விடுத்திருந்தார். திருவாங்கூர் மகா ஜனங்களை மாத்திரமல்ல, அகில உலகையும் ஸ்ரீ பத்மநாபஸ்வாமிதான் ரக்ஷித்து வருகிறாரென்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வர்.

ஆனால், மற்ற சமஸ்தானங்களைப் போலவே திருவாங்கூர் சமஸ்தானத்திலும் பிரிட்டிஷ் ரெஸிடெண்டின் சட்டாம்பிள்ளைத்தனம் ஏற்பட்ட பின், ரெஸிடெண்டுடன் வம்புக்கு நிற்க மனமின்றி ஸ்ரீ பத்மநாபஸ்வாமி ஆட்சி அதிகாரத்திலிருந்து விலகிக் கொண்டிருக்க வேண்டுமென்பதே நமது நம்பிக்கையாகும்!

* * *

நிற்க. புது டில்லியில் நடந்து வரும் அரசியல் நிர்ணய மகாசபையிலும், பின்னர் ஏற்பட விருக்கும் இந்திய ஐக்கியத் திட்டத்திலும் சமஸ்தானங்கள் கலந்து கொள்ளத் தங்களுடைய நிபந்தனைகள் என்னவென்பதை இப்போது சமஸ்தான மண்டலாதிபதிகள் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்கள்.

இதற்கு முன் என்றுமிராதவாறு அறுபது மகாராஜாக்கள் அடங்கிய மகத்தான மகாநாடொன்று கூடி, அந்த நிபந்தனைகளுக்கு முத்திரையும் வைத்திருக்கின்றது.

அந்த நிபந்தனைகளின் விவரமாவது:

"இந்திய ஐக்கியத் திட்டத்தில் சேரும்படி எங்களை வற்புறுத்த எவருக்கும் அதிகாரமிருக்கக் கூடாது. அவ்விஷயமாக நாங்கள் சமரசப் பேச்சு நடத்தத் தயார். எனினும் இறுதியில் சேருவதா, அல்லது வேண்டாமா என்பதை முடிவு செய்து கொள்ளும் முழு உரிமை எங்களுக்கு மாத்திரமே உண்டு. சில சமஸ்தானங்கள் அத்திட்டத்தில் சேரலாம், சில சேராமல் இருக்கலாம். ஏன் சேர்ந்தாய், அல்லது ஏன் சேரவில்லை என்று எங்களை யாரும் கேட்கக் கூடாது. இப்போது நாங்கள் விவாதத்தில் கலந்து கொண்டாலும், இந்தியாவின் அரசியல் திட்டம் பூரணமாகத் தயாரிக்கப் பெற்ற பின்தான் எங்கள் நிலைமை என்னவென்பதை முடிவு செய்வோம். நாங்களாக இஷ்டப்பட்டு விட்டுக் கொடுத்தாலொழிய, எவ்விஷயத்தை யொட்டியும் இந்திய ஐக்கிய சர்க்கார் எங்கள் மீது அதிகாரம் செலுத்தக் கூடாது. சமஸ்தானங்களின் அரசியல், எல்லை, வாரசுரிமை, சட்டம்,

பம்பாயில் "பதி பக்தி"

பம்பாய் மதுங்காவிலுள்ள கலை பக்தக் கழகத்தார் "பதி பக்தி" என்னும் சமூக நாடகத்தை நவகாளியிலும் பிஹாரிலும் கஷ்டமடைந்தவர்களின் உதவிக்காக நடத்தப் போகிறார்கள். பம்பாய் உள்நாட்டு மந்திரி ஸ்ரீ மொரார்ஜி தேசாய் மேற்படி நாடகத்துக்குத் தலைமை வகிப்பார். மதுங்கா கால்ஸா காலேஜ் ஹாலில் 4—2—47 செவ்வாய்க்கிழமை மாலை 4-30 மணிக்கு நாடகம் ஆரம்பமாகும். பம்பாய்த் தமிழர்கள் பெருந் திரளாக விஜயம் செய்து மேற்படி புனித கைங்கரியத்தை வெற்றிகரமாக நடத்திக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

பழக்க வழக்கங்கள் முதலிய எதிலும் தலையிட இந்திய ஐக்கிய சர்க்காருக்கு அதிகாரம் இருக்கக் கூடாது. இந்தியாதி, இந்தியாதி.''

இவை மாத்திரமல்ல; மன்னர்கள் தாங்கள் நிறைவேற்றியுள்ள நிர்மானத்தில் மற்றொரு முக்கிய ஷரத்தையும் சேர்த்திருக்கிறார்கள்.

அதாவது, சமஸ்தானங்களின் நிர்வாகத்தில் இதுவரை பிரிட்டிஷ் சர்க்காருக்கிருந்த எல்லா அதிகாரங்களும், இனி மன்னர்கள் கைக்கு வந்துவிட வேண்டுமே யன்றி, அவைகளை யொட்டி இந்திய ஐக்கிய சர்க்காருக்கு எவ்வித அதிகாரமும் இருக்கக்கூடாதென்பதே யாகும்.

பச்சையாகக் கூறுமிடத்து மேற்படி ஷரத்தின் பொருள் இதுதான்: ''இதுவரை நாங்கள் பிரிட்டிஷார் ஆட்டி வைத்தபடி ஆடி வந்தோம்; இனி எங்கள் இஷ்டப்படி ஆடப் போகிறோம்'' என்று சமஸ்தான மன்னர்கள் கூறுகின்றனர்.

மற்றும் மேற்படி மகாநாட்டில் ஆள்வார் மகாராஜா, சிந்தியா மகாராஜா, பிகானிர் மகாராஜா முதலியோர் காரசாரமாகவும் பேசி யிருக்கிறார்கள். ''நம்மை நோக்கி நிற்கும் ஆபத்தை நாமெல்லோரும் ஏகோபித்து நின்று உறுதியுடன் எதிர்க்க வேண்டும்'' என்று மேற்படி மகா ராஜாதி ராஜாக்கள் துள்ளிக் குதித்திருக்கிறார்கள்.

பல வருஷங்களாகப் பிரஜைகளின் பிறப்புரிமைகளைப் பறிமுதல் செய்து ஏதேச்சாதிகாரம் செலுத்தி ருசி கண்ட சமஸ்தான மண்டலாதிபதிகள், அரசியல் நிர்ணய மகா சபையில் பண்டித ஜவாஹர்லால்ஜியின் இந்தியக் குடியரசுத் தீர்மானம் நிறைவேறி யிருப்பதைக் கண்டு அதிர்ச்சி யடைந்துள்ளனர். அவர்கள் தங்களுடைய ஜரிகைத் தலைப் பாகைகளைச் சரியாக இழுத்து வைத்துக்கொண்டு மீசையை முறுக்குவதற்கு மேற்படி பீதிதான் காரணம்.

ஆனால் இந்திய மன்னர்கள் ஓர் உண்மையை இன்னும் கூட அறிந்து கொள்ளாதது ஆச்சரியமாக இருக்கிறது. இன்று அகில உலகமும் சுதந்திர சங்க நாதத்தால் கிடுகிடுத்து வருகின்றது. சர்வ வல்லமையுடன் விளங்கிய சர்வாதிகார கோஷ்டிகள் காலச் சக்கரத்தால் சிதைவுற்று மண்ணோடு மண்ணாகி விட்டன. அதிகார ஆணவ வெறி தலைக்கேறிக் கிடந்த

கல்கத்தாவில் தியாகராஜர்

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் நூற்றாண்டுக் கொண்டாட்டம் ஜனவரி மாதம் 11ல கல்கத்தாவில் கான கந்தர்வ சங்கீத சம்ராட் செம்பை வைத்தியநாத பாகவதரின் தலைமையில் ஆரம்பமாயிற்று. அன்று காலையில் ஆராதனை மகோத்ஸவம் விமரிசையாக நடந்தது. மாலையில் டி. கே. ராமச்சந்திரன் வயலின், ஸ்ரீகண்டன் மிருதங்கம், தின்னியம் கஞ்சிரா, ஆலங்குடி கடம் ஆகிய பக்க வாத்தியங்களுடன் சங்கீத சம்ராட்டின் கச்சேரி அமோகமாக நடந்தது.

மறுநாள் 12ல ஸ்ரீ டி. கே. ராதாகிருஷ்ணன் வேணுகானமும், அதைத் தொடர்ந்து பாலக்காடு நாராயண பாகவதர், ஸ்ரீமதி கோச்சம்மாள், குமாரி ரத்தினம், ஸ்ரீமதி கமலா ரங்கசாமி, ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி மிருத்யுஞ்சயன் ஆகியவர்களின் சங்கீதக் கச்சேரிகளும் நடைபெற்றன.

சங்கீத சம்ராட் செம்பை தமது சரள சுபாவத்தினாலும், எல்லாருடனும் கலந்து பழகும் இனிய குணத்தினாலும் கல்கத்தாவிலுள்ள தென்னிந்தியர்களுடைய அபிமானத்தைக் கவர்ந்து, மேற்படி உற்சவம் சிறப்பாக நடந்ததற்கு முக்கிய காரண புருஷராக விளங்கினார்.

கோவேரி ராஜபுரம் ஸ்ரீ தேவராஜ பாகவதரின் கதா காலட்சேபம், குன்னக்குடி வெங்கட்ராமய்யர், எஸ். வி. பார்த்தசாரதி ஆகியவர்களின் சங்கீதக் கச்சேரி—இவற்றுடன் மகோத்ஸவம் மகத்தான வெற்றியுடன் இனிது முடிந்தது. —ஒரு நிருபர்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கூட, தனது பழைய போக்கை முற்றிலும் மாற்றிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்த மேற்பட்டிருக்கிறது.

அப்படி யிருக்க, நமது மன்னர்களின் மண்டலம் மாத்திரம் மதியிழந்து காரியங்களைச் செய்து வருவது வேடிக்கைக் கூத்தல்லவா?

இந்தியாவின் மொத்த விஸ்தீரணத்தில் மூன்றில் ஒரு மடங்கு சமஸ்தானங்களே. இந்தியாவினுடைய மொத்த ஜனத் தொகையில் கால் மடங்கு சமஸ்தானங்களில் இருக்கிறது. எனவே ஒரு சில மண்டலாதிபதிகளின் ஏதேச்சாதிகார உரிமையை ஸ்தாபிப்பதற்காகக் கோடிக் கணக்கான ஜனங்களின் பிறப்புரிமையைப் பலி கொடுப்பதா?

சுதந்திர வெறி பிரமாதமாக இருந்து வரும் இக்காலத்தில், கோடிக் கணக்கான ஜனங்களின் மூலாதாரமான உரிமைகளை நசுக்க முற்படுவது எவ்வளவு ஆபத்தாக முடியுமென்பதை நமது மன்னர்கள் அறிவார்களாயின், அவர்களுடைய தீர்மானத்தின் வாசகங்களும் தொனியும் வேறு விதமாக இருந்திருக்கும்.



சோலைமலை இளவரசி

கல்கி

6. "மாலை வருகிறேன்!"

நீண்ட நேரம் வரையில் மாறனேந்தல் இளவரசன் பிரக்ஞையேயில்லாமல் தூங்கினான். நேரமாக ஆகத் தூக்கத்தில் கனவுகள் தோன்ற ஆரம்பித்தன. சில சமயம் இன்பக் கனவுகள் கண்டபோது, தூங்குகின்ற முகத்தில் புன்னகை மலர்ந்தது. வேறு சில சமயம் பயங்கரமான கனவுகள் தோன்றி அவன் சுந்தர முகத்தை விகாரப் படுத்தின.

கடைசியில் வேட்டை நாய் ஒன்று தன்னுடைய மூக்கைக் கடிப்பதாகக் கனவு கண்டு உலகநாதத் தேவன் உதறி அடித்துக்கொண்டு எழுந்தான். பார்த்தால், அவன் எதிரே வேட்டை நாய் எதுவும் இல்லை. சோலைமலை இளவரசிதான் நின்றுகொண்டிருந்தாள். நின்றதோடல்லாமல், முல்லை மொட்டுக்களை யொத்த அவளுடைய அழகிய பற்கள் தெரியும்படி சத்தமில்லாமல் சிரித்துக் கொண்டுமிருந்தாள்.

சற்று நிதானித்து யோசித்ததும் இளவரசனுக்குத் தன்னுடைய நிலைமை இன்னதென்று ஞாபகம் வந்தது. இளவரசியின் தோற்றத்தையும், அவளுடைய கையில் வைத்திருந்த பூச் செடியின் காம்பையும் கவனித்து விட்டு அவள் அந்தச் செடியின் காம்பினால் தன் மூக்கை நெருடி உறக்கத்திலிருந்து எழுப்பியிருக்க வேண்டுமென்று ஊகித்துக் கொண்டான்.

"ஐயா! கும்பகர்ணன் என்று இராமாயணக் கதையிலே கேட்டிருக்கிறேன். இப்போதுதான் முதன் முதலாக நேரிலே பார்த்தேன். உம்மைப் போல் தூங்குமூஞ்சியை நான் இத்தனை நாளும் கண்டதேயில்லை. எத்தனை நேரம் உம்மை எழுப்புவது? அதிலும் பட்டப் பகலில் இப்படியா தூங்குவார்கள்?" என்றாள் இளவரசி.

"அம்மணி! நேற்று இரவு முப்பது நாழிகை நேரத்தில் ஒருகண நேரம் கூட நான் கண்ணைக் கொட்டவில்லை. அதை நினைவில் வைத்துக் கொண்டால், என்னை இப்படி நீ ஏசமாட்டாய். போனால் போகட்டும். எதற்காக என்னை எழுப்பினாய்? ஏதாவது விசேஷம் உண்டா? இப்போதே நான் போய்விட வேண்டுமா? சூரியன் மலைவாயில் விழுந்ததும் கிளம்பலாம் என்று பார்த்தேன்!" என்றான் உலகநாதன்.

"இப்போதே உம்மைப் புறப்படச் சொல்லவில்லை. இருட்டிய பிறகு புறப்பட்டாலே போதும். காலையில் கூட ஒன்றும் நீர் வயிற்றுக்குச் சாப்பிடவில்லையே, நேரம் ரொம்ப ஆகிவிட்டதே என்று எழுப்பினேன். உமக்குப் பசிக்கவில்லையா? ஒரு

வேலை பசியாத வரம் வாங்கி வந்திருக்கிறீரா?'' என்றாள் மாணிக்கவல்லி.

அப்போது உலகநாதத் தேவனுக்குத் தன்னுடைய வயிற்றின் நிலைமை நன்றாக ஞாபகத்துக்கு வந்தது. வயிற்றுக்குள்ளே ஏதோ ஒரு பெரிய பள்ளம் இருப்பது போலவும் அதை மேலும் ஆழமாக யாரோ தோண்டி எடுத்துக் கொண்டிருப்பது போலவும் தோன்றியது!

"பசியா வரம் வாங்கிய பாக்கியசாலி அல்ல நான். அசாத்தியமாகப் பசிக்கத்தான் செய்கிறது. தூங்குகிறவனை எழுப்பிப் பசியை நினைவூட்டியதனால் ஆவது என்ன? சாப்பாட்டுக்கு ஏதாவது வழி சொன்னால் அல்லவா தேவலை? இன்னும் சற்று நேரம் இப்படியே பசிக்கு ஒன்றும் கிடைக்காமலிருந்தால் உன்னையே சாப்பிட்டாலும் சாப்பிட்டு விடுவேன்! கும்பகர்ணன் அப்படித்தான் தூங்கி எழுந்ததும் மனிதர்களையும் மிருகங்களையும் அப்படியே விழுங்கிப் பசி தீர்ந்தானாம். தெரியுமல்லவா?'' என்றான் உலகநாதன்.

மாணிக்கவல்லி அதைக் கேட்டு இள நகை புரிந்து கொண்டே, "அப்படியெல்லாம் நீர் செய்ய வேண்டியதில்லை. உமக்குச் சாப்பாடு வந்திருக்கிறது!'' என்றாள்.

இளவரசி நோக்கிய திசையை உலகநாதத் தேவனும் நோக்கியபோது, மண்டபத்தின் தூணுக்குப் பக்கத்தில் கூஜாவில் தண்ணீரும் தட்டிலே சாப்பாடும் வைத்திருப்பது தெரிந்தது.

அவ்வளவுதான்; இளவரசன் ஒரு கணத்தில் குதித்து எழுந்து முகத்தையும் கழுவிக்கொண்டு, சாப்பாட்டுத் தட்டைத் தனக்கு அருகில் இழுத்துக் கொண்டான். அதில் இருந்த அரைப் படி அரிசிச் சோறு, கறி வகைகள், அதிரசம், பணியாரம் முதலியவற்றையெல்லாம் அரைக்கால் நாழிகை நேரத்தில் தீர்த்துத் தட்டையும் காலி செய்தான்.

இடை யிடையே தனக்கு இத்தகைய பேருதவி செய்த பெண் தெய்வத்தை நன்றியுடன் பார்த்துக் கொண்டே உணவை விழுங்கினான்.

இளவரசியோ அவன் ஆர்வத்துடன் உணவருந்தும் காட்சியை அடங்காத உற்சாகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தக் காட்சியில் அதற்கு முன் என்று மறியாத மகிழ்ச்சி அவளுக்கு உண்டாகிக் கொண்டிருந்தது. மாணிக்கவல்லிக்கு நினைவு தெரிந்த காலம் முதல் இன்று வரையில், அவளுக்கு மற்றவர்கள் பணிவிடை செய்வதுதான் வழக்கமா யிருந்தது. தான் இன்னொருவருக்கு ஏதேனும் உதவி செய்வதில் எத்தகைய இன்பம் இருக்கிறது என்பதை நாளதுவரை அவள் அறிந்ததில்லை. இன்றுதான் முதன் முதலாக அவள் பிறருக்குத் தொண்டு புரிந்து அவர்களுடைய கஷ்டத்தைப் போக்குவதில் ஏற்படும் சந்தோஷத்தை அறிந்து அநுபவித்தாள். இந்த உள்ளக் கிளர்ச்சி அவளுடைய முகத்துக்கு ஒரு புதிய சோபையைக் கொடுத்திருந்தது.


இளவரசன் உணவருந்தி விட்டுக் கை கழுவி முடிந்ததும், "போதுமா? இன்னும் ஏதாவது வேண்டுமா?'' என்று மாணிக்கவல்லி கேட்டாள்.

"இனிமேல் வேண்டியது உன்னுடைய தயவு ஒன்று மட்டுந்தான்! எனக்கு அடைக்கலம் அளித்து உயிரையும் கொடுத்தாயே? உனக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்? எந்த விதத்தில் என் நன்றியைச் செலுத்தப் போகிறேன்?'' என்றான் உலகநாதன்.

"இவ்விடம் நீர் வந்ததுபோலவே ஒருவரும் அறியாதபடி திரும்பிப் போய்ச் சேர்ந்தால் அதுதான் எனக்கு நீர் செய்யும் பிரதி உபகாரம்!'' என்றாள் மாணிக்கவல்லி.

"அந்த உபகாரம் அவசியம் செய்கிறேன், அம்மணி! என் உடம்பில் இப்போது தெம்பு இருக்கிறது; இடுப்பிலே கத்தி இருக்கிறது; அப்புறம் சோலைமலை முருகக் கடவுளும் இருக்கிறார்! இப்போதே வேலுமாலும் கிளம்பி விடுகிறேன்'' என்று சொல்லிக் கொண்டு எழுந்தான்.

"வேண்டாம்; இப்போது போனால் யாராவது கவனிப்பார்கள். ஏதாவது தொல்லை ஏற்படலாம். முதலில் சொன்னபடி இருட்டிய உடனே புறப்பட்டால் போதும்!'' என்றாள் இளவரசி.



"அப்படியே ஆகட்டும்; இருட்டிய பிறகு ஒரு கொடிப் பொழுதுகூட இங்கே நான் நிற்கமாட்டேன்."

"நான் மறுபடியும் வருவேன் என்று எதிர்பார்த்துக் கொண்டு காத்திருக்க வேண்டாம். தெரிகிறதா?"

"நன்றாய்த் தெரிகிறது. அந்த உத்தேசமே எனக்குக் கிடையாது. அதிர்ஷ்ட தேவதையின் கருணை இரண்டு தடவை கிடைத்து விட்டது. இன்னொரு தடவையும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாமா? இருட்டியதும் கிளம்பி விடுகிறேன்."

"இல்லை; வேண்டாம். ஒருவேளை இன்று சாயங்காலத்துக்குள் அப்பா திரும்பி வந்தாலும் வந்து விடுவார். எல்லாவற்றுக்கும் நான் இன்னொரு தடவை வந்து தகவல் சொல்கிறேன். அதுவரையில் நீர் இங்கேதான் இருக்க வேண்டும். மறுபடி நான் வந்து சொல்லும் வரையில் போகக்கூடாது. தெரிகிறதா?"

பெண்களின் சஞ்சல புத்தியை நினைத்துப் புன்னகை புரிந்த வண்ணம் இளவரசன், "ஆகா! தெரிகிறது! அப்படியானால் கொஞ்சம் சீக்கிரமே வந்துவிடு. இன்றைக்கு இரவு நாலு நாழிகைக்குச் சந்திரன் உதயமாகும். பளிச்சென்று அடிக்கும் நிலவில் கோட்டைச் சுவரைத் தாண்டிச் செல்வது கஷ்டமாயிருக்கும்" என்றான்.

"ஓகோ! நிலா வெளிச்சத்தை நினைத்தால் பயமாயிருக்கிறதா? சற்று முன்னால் 'இடுப்பில் கத்தி இருக்கிறது; உயிருக்குப் பயமில்லை!' என்று ஜம்பம் பேசினீரே?" என்று இளவரசி கேலி செய்தாள்.

"ஜம்பம் இல்லை, அம்மணி! நான் கூறியது உண்மைதான். என் உயிரைப் பற்றி எனக்குக் கவலையே யில்லை. என் காரணமாக உனக்கு ஒரு தொந்தரவும் ஏற்படக் கூடாதே என்றுதான் கவலைப் படுகிறேன்."

"என்னைப் பற்றி நீர் ஒன்றும் கவலைப்பட வேண்டாம். நான் சோலை மலை இளவரசி. என் தந்தைக்குச் செல்லப் பெண். என்னை யார் என்ன சொல்லக் கிடக்கிறது?—நான் சீக்கிரமாக வந்தாலும் நேரங்கழித்து வந்தா

னும் நான் வந்த பிறகுதான் நீர் போக வேண்டும். இல்லா விட்டால்......''

"இல்லா விட்டால் என்ன?''

"உடனே சங்கிலித் தேவனைக் கூப்பிட்டு உம்மை அவனிடம் ஒப்படைத்து விடுவேன்.''

"அவ்வளவு சிரமம் உனக்கு நான் வைக்கவில்லை. நீ மறுபடி வருகிற வரையில் இங்கேயே இருப்பேன். ஆனால் சீக்கிரமாக வந்து விட்டால் ரொம்ப உபகாரமாயிருக்கும். நான் செய்யவேண்டிய வேலை எவ்வளவோ இருக்கிறது.''

"சீக்கிரமாகவே வருவதற்குப் பார்க்கிறேன். ஆனால், நிஜமாகவே உமக்குப் பசி தீர்ந்து விட்டதல்லவா? நீர் சாப்பிடுவதைப் பார்த்தபோது இன்னும் கொஞ்சம் கொண்டுவரவில்லையே என்று இருந்தது.''

"அழகுதான்! இப்போது நான் சாப்பிட்டது இன்னும் மூன்று நாளைக்குப் போதும். இராத்திரி நிச்சயமாகச் சாப்பாடு கொண்டுவர வேண்டாம்.''

"ஆகா! சோழமல்ல இளவரசி உமக்குச் சோறு படைக்கப் பிறந்தவள் என்று எண்ணியிருக்கிறீரோ? ஏதோ பசித்திருக்கிறீரே என்று பரிதாபப்பட்டு ஒரு வேளை கொண்டு வந்தால் இராத்திரிக்கும் கொண்டு வா என்கிறீரே?''

"ஐயையோ! நான் அப்படிச் சொல்லவில்லையே? வேண்டாம் என்றுதானே சொன்னேன்?''

"வேண்டாம் என்று சொல்வதற்கு அர்த்தம் என்னவென்று எனக்குத் தெரியாதா? கட்டாயம் கொண்டு வா என்றுதான் அர்த்தம். ஆனால் அது முடியாத காரியம்.''

"வேண்டாம், அம்மணி, இராத்திரி எனக்கு ஒன்றும் வேண்டாம்!''

"நான் கொண்டு வருவதாக இருந்தால் அல்லவா நீர் வேண்டாம் என்று சொல்ல வேண்டும்?''

இளவரசன் 'மௌனம் கலக நாஸ்தி' என்ற பழமொழியை நினைவு கூர்ந்து சும்மா இருந்தான். இளவரசியும் போஜன பாத்திரங்களை எடுத்துக் கொண்டு சென்றாள்.



மாணிக்கவல்லி அவ்விடமிருந்து போன பிறகு மாறனேந்தல் இளவரசன் மாலைப் பொழுதின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அவ்விதம் அவன் ஆவல் கொள்வதற்கு இரண்டு முக்கியமான காரணங்கள் இருந்தன. உடம்பின் களைப்புத் தீர்ந்து விட்டபடியால் அவன் உடனே புறப்பட்டுச் செல்ல விரும்பினான். எத்தனையோ அவசர காரியங்கள் அவன் செய்வதற்கு இருந்தன. சோலைமலைப் பிரதேசத்தை அன்று இரவுக் கிரவே எப்படியாவது தாண்டிப் போய்விட வேண்டும். தூர தூர தேசங்களுக்குச் சென்று அங்கங்கே கும்பெனி ஆட்சிக்கு விரோதமாயுள்ள ராஜாக்களையும் நவாபுகளையும் சந்திக்க வேண்டும். பெரிய படை திரட்டிக் கொண்டு திரும்பி வரவேண்டும். வியாபாரம் செய்வதற்காக வந்து இராஜ்யங்களைக் கவர்ந்து கொண்டிருக்கும் வெள்ளை மூஞ்சிகளை நாட்டிலிருந்து துரத்தியடிக்க வேண்டும். மூட்டை முடிச்சுகளைச் சுருட்டி எடுத்துக் கொண்டு அவர்கள் கப்பல் ஏறி ஓடும்படி செய்ய வேண்டும். மாடு இல்லாமலும் குதிரை இல்லாமலும் ரயில் வண்டி விடுவதாகச் சொல்லி, தேசமெங்கும் இரும்புத் தண்டவாளங்களைப் போட்டல்லவா அவர்கள் இந்தப் புராதன பாரத தேசத்தைக் கட்டி ஆளப் பார்க்கிறார்கள்? இரும்புக் கம்பியால் வேலி எடுத்துத் தேசத்தையே யல்லவா சிறைச்சாலையாக்கப் பார்க்கிறார்கள்? அப்படிப் பட்டவர்களைத் துரத்தி யடிப்பதற்கு வடக்கே டில்லி பாதுஷா என்ன, மராட்டிய மகா வீரர்கள் என்ன, ஜான்ஸி மகாராணி என்ன,—இப்படி எத்தனையோ பேர் ஆயத்தம் செய்து கொண்டிருப்பதாக அவன் கேள்விப் பட்டிருந்தான். அவர்களோடு தானும் சேர்ந்துகொள்ள வேண்டும். பெரிய படை திரட்டிக்கொண்டு திரும்பி வந்து தமிழகத்திலிருந்தும் வெள்ளைக்காரர்களைத் துரத்தி யடிக்கவேண்டும். பிறகு, முதற் காரியமாக அவர்கள் போட்ட ரயில் தண்டவாளங்களையெல்லாம் பிடுங்கி எறிந்துவிட வேண்டும்!......

இப்படி யெல்லாம் மாறனேந்தல் இளவரசன் மனக் கோட்டைகள் கட்டிக்கொண்டிருந்தான். அந்த மனக் கோட்டைகளுக்கு இடையிடையே மாறனேந்தல் கோட்டையின் கதி இதற்குள் என்ன ஆயிற்றோ, தன்னுடைய தாய் தந்தை தம்பி ஆகியவர்கள் என்ன கதியை அடைந்தார்களோ என்ற கவலையும் அவனைப் பிடுங்கித் தின்றுகொண்டிருந்தது.

எனவே, சூரியன் எப்போது அஸ்தமிக்கும் என்று அவன் பரபரப்புடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்ததில் வியப்பில்லை யல்லவா?

அந்தப் பரபரப்புக்கு இரண்டாவது சிறு காரணம் ஒன்றும் இருக்கத்தான் செய்தது. அது, இரவு வந்ததும் சோலைமலை இளவரசி அங்கு வருவாள் என்ற எண்ணந்தான். தான் அந்தக் கோட்டையை விட்டுப் போவதற்கு முன்னால் மாணிக்கவல்லியை மறுபடியும் ஒரு தடவை பார்க்கலாம் என்கிற நினைவு அவனுக்கு அதுவரையில் அனுபவித்து அறியாத ஒரு அதிசயமான உவகை உணர்ச்சியை அளித்துக் கொண்டிருந்தது. சிற்சில சமயம், காரியங்கள் வேறுவிதமாக நடந்திருந்தால் இந்த அபூர்வமான தேவகன்னிகையைத் தான் மணந்திருக்கலாமல்லவா என்ற எண்ணமும் உதித்தது. சோலைமலை ராஜாவைப் பற்றி அப்படியெல்லாம் தான் வாய்த் துடுக்காகப் பேசி யிராவிட்டால் அந்தப் பெண்ணுக்கும் தனக்கும் வைபோகமாகக் கலியாணம் நடந்திருக்கலாமல்லவா? ஆனால் உண்மையில் தன்பேரில் குற்றம் ஒன்றுமில்லை. சரா புரா வென்று மலைக் குறவர் பாஷை பேசும் வெள்ளைக்கார சாதியார் வந்ததனால் அல்லவா அவ்விதம் நடவாமல் போயிற்று? தான் கரம் பிடித்து மணந்திருக்கக் கூடிய பெண்ணிடம் அடைக்கலம் கேட்கும்படியும், அவள் அளித்த ஒருவேளை உணவுக்காக நன்றி செலுத்தும்படியும் நேரிட்டது?......

இவ்விதம் உள்ளம் அங்கு மிங்கும் அப்படியும் இப்படியும் ஊசலாட, உலகநாதன் ஒவ்வொரு கணமும் ஒரு யுகமாகக் கழித்துக்கொண்டு அந்தப் புர நந்தவனத்து வஸந்த மண்டபத்தில் உட்கார்ந்திருந்தான்.

கடைசியாக, கழியாத நீள் பகலும் கழிந்தது. நாலு பக்கங்களிலும் இருள் சூழ்ந்து வந்தது. கோட்டை மதிளுக்கு அப்பால் சோலைமலைச் சிகரத்தின் உச்சியில் முருகன் கோயில் தீபம் ஒளிர்ந்தது. இனி, சீக்கிரத்திலேயே சோலைமலை இளவரசி தனக்கு விடை கொடுக்க வந்து விடுவாள் என்ற எண்ணத்தினால் இளவரசனின் நெஞ்சு தடக், தடக் என்று அடித்துக் கொண்டது.

பார்த்துக் கொண்டிருக்கும்போதே அவனுடைய கண்ணெதிரே தோன்றிய முருகன் கோயில் தீபம் பெரிதாகிக் கொண்டு வந்தது. கிட்டத்தட்ட மாலை வேளையில் உதிக்கும் பூரண சந்திரனுடைய வடிவை அது அடைந்தது. சட்டென்று அந்தப் பூரண சந்திரன் ரயில் வண்டியின் ஸர்ச் லைட்டாக மாறியது. ரயிலும் ஸர்ச் லைட்டும் அதி வேகமாக அவனை நெருங்கி நெருங்கி நெருங்கி வந்தன. ஸர்ச் லைட்டின் உஷ்ணமான வெளிச்சம் அவனுடைய முகத்தில் பளீரென்று விழுந்து மூடியிருந்த கண்களையும் கூசும்படி செய்தது.

* * *

குமாரலிங்கம் தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான். தான் சோலைமலை இள-சன் அல்லவென்பதையும், தேசத் ராண்டன் குமாரலிங்கம் என்பதையும் அவன் உணர்வதற்குச் சிறிது நேரம் பிடித்தது. கடைசியாக அவன் முகத்தில் அடித்த வெளிச்சம் ரயில் வண்டியின் ஸர்ச் லைட் வெளிச்சம் அல்ல, — உச்சி வேளை சூரியனின் வெய்யில் வெளிச்சம் என்பதையும் தெரிந்து கொண்டான். உதய நேரத்தில் தான் அந்தப் பாழும் கோட்டைக்குள் பிரவேசித்து அதிகமாக இடியாமலிருந்த வஸந்த மண்டபத்தில் படுத்த விஷயமும் நினைவுக்கு வந்தது. ஆனால், அதுவரையில் அவன் கண்ட காட்சி, அடைந்த அநுபவம் எல்லாம், தூக்கத்திலே கண்ட மாயக் கனவா? இல்லை, இல்லை, ஒரு நாளும் இல்லை. ஒவ்வொரு சம்பவமும், ஒவ்வொரு அநுபவமும், பிரத்யட்சமாகப் பார்த்து உணர்ந்து அநுபவித்ததாக வல்லவா தோன்றின? அவ்வளவும் வெறும் கனவாகவோ, குழம்பிப் போன மூளையின் விசித்திர கற்பனையாகவோ இருக்க முடியுமா? அல்லது உண்மையிலேயே முன்னொரு பிறவியில் தன்னுடைய வாழ்க்கை அநுபவங்கள்தான் அவ்வளவு தெளிவாக நினைவுக்கு வந்தனவா?

இத்தகைய மனக் குழப்பத்துடன் குமாரலிங்கம் சுற்று முற்றும் பார்த்த போது, சற்றுத் தூரத்தில் அந்தப் பாழடைந்த கோட்டையில் மனிதர் நடந்து நடந்து ஏற்பட்டிருந்த ஒற்றையடிப் பாதை வழியாகத் தலையில் கூடையுடன் ஒரு இளம் பெண் வருவதைக் கண்டான். அந்தக் காட்சி அவனுடைய நெஞ்சின் ஆழத்தில் மகிழ்ச்சியையும் அடி வயிற்றில் திகிலையும் உண்டாக்கியது. எக்காரணத்தினாலோ, மகிழ்ச்சியைக் காட்டிலும் திகில் அதிகமாயிற்று. தன்னுடைய நிலைமையும் ஞாபகத்துக்கு வந்தது. அதே நேரத்தில் பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தின் ஒற்றர்கள் தன்னை நாலா பக்கத்திலும் தேடிக் கொண்டிருப்பார்கள். இச் சமயம் தான் அந்தப் பாழும் கோட்டையில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தால் அந்தப் பெண் ஏதாவது கேட்கக்கூடும். தான் ஏதாவது பதில் சொல்லவேண்டியிருக்கும். அதனால் என்ன விளையுமோ என்னமோ? அவள் கண்ணில் படாமல் மறைந்து கொள்வதற்கும் அப்போது நேரமில்லை. பின்னே, வேறு என்ன செய்யலாம்? மறுபடியும் அங்கேயே படுத்துத் தூங்குவது போலப் பாசாங்கு செய்வதுதான் சரி. அந்தப் பெண் தான் தூங்குவதைப் பார்த்து விட்டுப் பேசாமல் தன் வழியே போய் விடுவாள். பிறகு எழுந்து மேலே தான் செய்ய வேண்டியது என்னவென்பதைப் பற்றித் தீர்மானித்துக் கொள்ளலாம்.

இவ்விதம் முடிவு செய்து கொண்டு குமாரலிங்கம் மறுபடியும் அந்தப் பழைய வஸந்த மண்டபத்தின் குறட்டில் படுத்தான். இரண்டு கண்களையும் இறுக மூடிக்கொண்டான்.

(தொடரும்)



வாழ்க நேதாஜி!

சென்ற ஜனவரி மாதம் 23உ அமரர் சுபாஷ் சந்திர போஸின் ஐம்பத்தோராவது ஜன்மதினம் நாடெங்கும் கொண்டாடப்பட்டது. ஸ்ரீ சுபாஷ் சந்திரர் பிரிட்டிஷ் ஸி. ஐ. டி. புலிகளுக்கு டிமிக்கி கொடுத்து விட்டு ஜெர்மனிக்குச் சென்று அங்கே இந்திய சுதந்திரப்போருக்கு ஆயத்தம் செய்தபோது எடுக்கப்பட்ட இரண்டு அபூர்வமான படங்கள் இவை. மேலே, ஜெர்மன் நாஜி பிரமுகர்கள் நேதாஜிக்கு வரவேற்பு அளிக்கிறார்கள். கீழே, அச்சமயம் ஜெர்மனியில் இருந்த இந்திய வீரர்கள் நேதாஜியை உபசரித்து மகிழ்கிறார்கள்.



அக்கப்போர்

"சக்கைப்போடு"

குதிரைப் பந்தயங்களில் குதிரை மேல் பணயங் கட்டுவதைத் தடுத்துவிடச் சென்னை காங்கிரஸ் சர்க்கார் உத்தேசித்திருக்கிறார்கள் என்னும் வதந்தி குதிரைப் பந்தய வட்டாரங்களில் பெருங் குழப்பத்தை உண்டுபண்ணியிருக்கிறது.

இது சம்பந்தமாகப் பந்தயக் குதிரைகள் ஒரு மகாநாடு கூட்டி யோசித்தனவாம். சில குதிரைகள் 'ஸ்ட்ரைக்' செய்ய வேண்டுமென்றும், இன்னும் சில குதிரைகள் உண்ணாவிரதம் இருக்கலாம் என்றும் யோசனை கூறினவாம்.

கடைசியில், மிதானக் கட்சியைச் சேர்ந்த சில குதிரைகளின் யோசனையின் பேரில், "பிரதம மந்திரியைப் பேட்டி கண்டு தமது குறைகளை முறையிட்ட பிறகு பரிகாரம் கிடைக்கா விட்டால் பிறகு தீவிர முறைகளைக் கையாளலாம்" என்று தீர்மானிக்கப்பட்டதாம்.

மேற்படி தீர்மானத்தின் பேரில், பந்தயக் குதிரைகளின் பிரதிநிதிகள் பிரதம மந்திரியைப் பேட்டி கண்டபோது, பிரதம மந்திரி "எல்லாவற்றையும் ஆற அமர யோசித்து விட்டு ஒரு விசாரணைக் கமிட்டி நியமிக்கிறேன்" என்று வாக்குறுதி கூறினாராம்.

கூடிய சீக்கிரத்தில் பந்தயக் குதிரைகளின் மாபெரும் ஊர்வலம், போலீஸ் தடியடி, கண்ணீர்ப் புகைப் பிரயோகம் ஆகியவற்றை எதிர்பார்க்கலாம் என்று விஷயமறிந்த பந்தய வட்டாரங்களில் சொல்லிக் கொள்கிறார்கள்.

★

சில தீவிர குதிரைப் பந்தய அபிமானிகள் பந்தயக் குதிரைகளை மறைமுகமாக 'டைரக்ட் ஆக்ஷன்' செய்யும்படி தூண்டி வருவதாகத் தெரிகிறது.

வேறு சில யுக்தி வாதிகள் "சர்க்கார் சட்டம் போடுகிறபடி போடட்டும். பந்தயக் குதிரைகள் மேல் பணயம் கட்டக் கூடாது என்றுதானே சட்டம் செய்வார்கள்? குதிரைகளை ஓட்டும் ஜாக்கிகளின் பேரில் நாம் பணயம் கட்டினால் போகிறது!" என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களாம்.

பிரதம மந்திரி பேட்டியில் ஆரம்பித்து, 'நேரடி நடவடிக்கை' வரையில் ஒன்றும் பிரயோஜனப்படா விட்டால் என்ன செய்கிறது என்ற பிரச்னை ஒரு பக்கத்தில் அடிபட்டு வருகிறது.

"ஒன்றும் பயன்படா விட்டால் ஒரு மாபெரும் பந்தயஸ்தான் கிளர்ச்சி தொடங்க வேண்டியதுதான்" என்ற முடிவுக்குச் சிலர் ஏற்கனவே வந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது.

★

பிரகாசம் சர்க்கார் மீது பரம பக்தியுள்ள சில பந்தயக் குதிரைகள் 'டைரக்ட் ஆக்ஷன் என்கிற பேச்சே உதவாது' என்று சொல்லி வருவதாகத் தெரிகிறது.

"பின்னே பந்தயத்தை நிறுத்தி விட்டால் நாம் எல்லாரும் என்ன செய்கிறதாம்?" என்று நாளது வருஷத்தில் முக்கால் பர்லாங் ஓடி முப்பதினாயிரம் பேரை மொட்டையடித்த குதிரை கேட்டதற்கு, முப்பது தடவை தோற்று மூன்று லட்சம் ரூபாய் கெலித்த குதிரை சொன்ன பதிலாவது:— "செய்வது என்ன? பகுத்தறிவுப் போட்டி ஒவ்வொன்றுக்கும் அறுபத்து நாலு விடை கண்டு பிடித்து அனுப்பிக் கொண்டிருந்தால் போகிறது!"

இதைக் கேட்டதும் மற்றப் பந்தயக் குதிரைகள் திடுக்கிட்டு மூர்ச்சையடைந்து விழுந்த பிறகு நிமிஷத்துக்குத் தொண்ணூறு மைல் வேகத்தில் பிய்த்துக் கொண்டு ஓடியதாக வதந்தி.

★

"சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் மந்திரி சபை ஏற்பட்டுப் பல மாத காலம் ஆகியும் இன்னும் ஏன் விவசாய அபிவிருத்தி எதுவும் நடக்கவில்லை?" என்று ஒரு பத்திரிகை நிருபர் கேட்கிறார்.

இதற்கு ஒரு கேள்வியா! விவசாய அபிவிருத்திக்குக் கால்டன் இல்லாதபடியால்தான் அது நடக்கவில்லை!

விவசாய அபிவிருத்தி எப்படி யிருந்தாலும், மோட்டார் பஸ் போக்கு வரவைச் சர்க்கார் எடுத்துக்கொண்ட இடங்களில் ரொம்ப அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிற தென்று திட்டமாகச் சொல்லப்படுகிறது.

முன்னே யெல்லாம் பத்துப் பேர் காத்துக் கொண்டிருந்த பஸ் ஸ்டாண்டுகளில் இப்போது முப்பது பேருக்குக் குறையாமல் நிற்கிறார்களாம்!

★

சென்னை சர்க்கார் அஸ்திவார உத்தியோகஸ்தர்களுக்கும் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கும் புதிய சம்பளத் திட்டம் வெளியிட்டிருக்கிறார்கள் அல்லவா?

மேற்படி புதிய சம்பளத் திட்டத்தினால் தங்களுடைய சம்பளம் உயர்கிறதா, குறைகிறதா என்னும் விஷயம் இன்னும் பல ஆசிரியர்களுக்குப் பிடிபட வில்லையாம்.

மேற்படி விஷயத்தைத் தெரிந்து கொள்வதற்காக ஒவ்வொரு ஆசிரியரும் கணக்குப் போட்டுப் பார்த்து மூளையைக் குழப்பிக் கொண்டிருக்கிறார்களாம்!

"எங்களுக்குப் புரியாத கணக்கைப் போட்டு மூளையைக் குழப்புகிறீர்கள் அல்லவா? அதனுடைய பலன் தான் இது?" என்று சொல்லிப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் குதூகலப்படுகிறார்களாம்.

★

ஜனவரி 26உ சுதந்திர தினத்தில் ஸ்ரீரங்கம் கோயில் திறக்கப்படும் என்று அச்சு நோட்டீஸ் போடப்பட்டிருந்தது. ஆனால் மேற்படி தேதிக்குள் சர்க்கார் உத்தரவு வந்து சேராதபடியால் அன்று கோயில் திறக்கப்பட வில்லையாம். இது காரணமாக அன்று ஸ்ரீரங்கத்தில் கூடியிருந்த பதினாயிரக்கணக்கான ஹரிஜனங்களும் பொது ஜனங்களும் பெரிதும் ஏமாற்ற மடைந்தார்கள் என்று ஒரு பத்திரிகை நிருபர் எழுதுகிறார்.

ஸ்ரீரங்கநாதருக்குத்தான் எல்லாரையும் விட அதிக ஏமாற்றம் என்று தெரிய வருகிறது. "அச்சு நோட்டீஸை நம்பி பக்தகோடிகளை வரவேற்பதற்காகத் தூக்கத்திலிருந்து எழுந்து உட்கார்ந்திருந்தது வீணாய்ப் போயிற்றே!" என்று பள்ளி கொண்ட பெருமான் வருத்தப்பட்டாராம்!

★

நீண்டகாலம் ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த மாஜி மந்திரி ஸ்ரீ வீராசாமி தமது வேலையை ராஜிநாமா செய்த மறு கணமே குணமடைந்து ஆஸ்பத்திரியிலிருந்து விடுதலையடைந்து விட்டார்.

இப்போது வைத்திய மந்திரி ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதி வைத்திய சிகிச்சைக்காக ஜெனரல் ஆஸ்பத்திரியில் பிரவேசித்திருப்பதாகப் பத்திரிகைகளில் செய்தி பிரசுரமாகி யிருக்கிறது.

சீக்கிரம் குணமடைந்து ஆஸ்பத்திரியிலிருந்து வெளிவருவதற்கு அவரும் ஸ்ரீ வீராசாமியின் வழியைக் கடைப்பிடிக்கலாம்.

★

"தினம் ஸ்ரீமதி லக்ஷ்மிபதி அம்மாள் ஆயுர்வேதம் முதலிய சுதேச வைத்திய முறைகளை அபிவிருத்தி செய்வதற்காகப் பிரமாதமான முயற்சிகள் செய்யப் போவதாகச் சொன்னாரே? அப்படியிருக்க, அவர் சிகிச்சை பெறுவதற்கு ஏன் 'இண்டியன் மெடிகல் ஸ்கூல்' ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கக் கூடாது?" என்று ஒரு அதிகப்பிரசங்கி கேட்கிறார்.

"தனக்கு வந்தால் தெரியும் தலைவலியும் ஜுரமும்" என்பது மேற்படி அதிகப்பிரசங்கிக்குத் தெரியாது போலும்!

தலைநகரில் தியாகராஜர்

இந்தியாவின் தலைநகராகிய டில்லியில், தென்னிந்திய சங்கக் கட்டடத்தின் இடப்புறத்தில், அலங்கார தோரணங்களோடு துலங்கிய பந்தலில், தென்னிந்திய சங்கீத அகாடமி, ஸங்கீத வித்வத் ஸமாஜம் இவைகளின் உதவியுடன் கர்நாடக சங்கீத சபையார் பதினேழு நாள் தியாகப் பிரும்ம நூற்றாண்டு மகோத்ஸவத்தைச் சிறப்பாக நடத்தினார்கள். பிரதி தினமும் வித்வான்களும், 'அமெச்சூர்' பாடகர்களும், பெண்மணிகளும் கான மழை பொழிந்தார்கள். பதினேழாவது நாளன்று ஆராதனை தினம். காலையில் நாதஸ்வர இசைத் தட்டுகளுடன் ஆரம்பமாகி, உஞ்சவிருத்தி, ஆராதனை, பஜனை, ஸ்ரீ ஏ. வி. சுப்புசாமி பாகவதரின் ஹரி கதா காலக்ஷேபம் முதலிய சகல வைபவங்களுடன் நடந்தது. கடைசி தினத்தில் வந்தேமாதரம் சொல்வதற்காக எழுந்த டெபுடித் தலைவர் ஸ்ரீ பி. எம். சுந்தரம் திணறித் திண்டாடிப் போய்விட்டார். "வந்தேமாதரம் சொல்லப் பெயர்களைப் பொறுக்குவதென்றால் டில்லியில் உள்ள தென்னிந்தியர்கள் எல்லோரும் அடங்கிய ஜாபிதா ஒன்றைத் தயாரிக்க வேண்டியதுதான்!" என்று அவர் கூறியது முக்காலும் உண்மை. மொத்தத்தில் மேற்படி தியாகப்பிரம்ம உற்சவமானது டில்லியில் தமிழர்கள் தொடங்கி யிருக்கும் பொதுக் காரியங்கள் எல்லாவற்றுக்கும் சிகரமாக அமைந்தது. "கிட்டு"

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

167. நடனத்துக்கான பக்திப் பாடல்!

ராமன் பர்ணசாலையை விட்டு மானை நாடிப் போனபோது, ஏதோ வில்லை எடுத்தான் அப்படியே போனான், என்றில்லை. "சீதை தனியாய் இருக்கிறாள், அவளை நன்றாய்ப் பார்த்துக்கொள்" என்று தம்பியிடம் சொல்லிவிட்டுப் போனான்.

ராமன் உயிர் போகும் ஆபத்தில் இருக்கிறான் என்று எண்ண ஆரம்பித்தவுடன் சீதையின் மனம் சிதறுண்டுபோக, கடுமையான வார்த்தைகளைச் சொல்லி லக்ஷ்மணனை அவ்விடத்தை விட்டுப் போகச் செய்து விட்டாள் அவள்.

அப்பாவி லக்ஷ்மணன் என்ன செய்வான்? சீதையை விட்டுத் திரும்பினவனாய் மெள்ள மெள்ள நடக்கிறான்.

போகும்போது தனக்குள்ளேயே, "இங்கேயே இருக்கிற தென்றால் நெருப்பில் விழுந்து இறந்து போவாள் சீதை. ராமனை நோக்கிப் போகிறேன் என்று ஏற்பட்டாலோ சாமான்யம் அல்லாத பெருங் கேடு வந்து நேரும்போலிருக்கிறதே!" என்று சொல்லிக் கொள்ளுகிறான்.

இருப்பனேல் எரியிடை
இறப்ப ளால்இவள் ;
பொருப்பனை யானிடைப்
போவெ னேயெனின்,
அருப்பமில் கேடுவந்(து)
அடையும் ;—ஆருயிர்
விருப்பனேன் என்செய்கேன் !'
என்று விம்மினான்.

[பொறுப்பனை யானிடை: இந்த இடத்தை விட்டு மலையைப் போன்ற திடகாத்திரமுள்ள ராமனை நோக்கி; அருப்பமில் கேடு: சாமான்ய மல்லாத கேடு; இருதலைக்கொள்ளி நிலையிலிருக்கும் எனக்கு என்ன செய்ய இருக்கிறது. இந்த அக்கினியில் விழுந்து உயிரை விட வேண்டியதுதான். ஆனால் ஏன் செய்யவில்லை? உயிரில் எனக்கு அவ்வளவு ஆசை! ஐயோ!

குறிப்பு:—ஒன்றுஞ் செய்ய இயலாதிருக்கும்போது, உயிரை விட்டுவிடுதல் நல்லது என்றுதானே தோன்றும்? ராமனைக் காக்க வந்தவன் உயிரை எப்படித் துறக்கலாம்? கூடாதே! லக்ஷ்மணனது மனக் குமுறலைப் பளிங்கில் வைத்துக் காட்டுவதுமாதிரி காட்டுகிறார் கவிஞர்.]

* * *

சிறிது தூரம் போன லக்ஷ்மணன் மறுபடியும் சீதையிடம் திரும்பி வந்து சொல்லுகிறான்: "எப்படியும் நான் போய்விடுகிறேன். ஆனாலும், அபாயம் ஏதாவது நேர்ந்தால் சடாயு பார்த்துக் கொள்ளுவான்; தன்னால் இயன்ற மட்டும் தடுக்கவும் செய்வான்" என்று சீதையிடம் பணிவோடு தெரிவித்து விட்டுப் போய்விடுகிறான்.

'போவது புரிவல்யான் ;
புகுந்த(து) உண்டெனின்
காவல்செய் எருவையின்
தலைவன் கண்ணுறும்.
ஆவது காக்கும்' என்(று)
அறிவித்(து), அவ்வழி,—
தேவர்செய் தவத்தினால்ச்
செம்மல் ஏகினான்.

[போவது புரிவல்யான் : எப்படியும் போகிறேன் நான், ஆனாலும் ஒரு வார்த்தை: பொருந்தது உண்டு எனின் : அபாயம் ஏதாவது நேர்ந்தால் ; காவல் செய் எருவையின் தலைவன் : நம்மைக் காத்துக்கொண்டே இருக்கிற, கழுகுகளுக்குத் தலைவனான சடாயு; கண்ணுறும் : பார்த்துக் கொள்ளுவான் (தூரதிருஷ்டி உடைமையினால்). ஆவது காக்கும் என்று அறிவித்து : வரும் ஆபத்தைத் தன்னால் இயன்ற மட்டும் தடுப்பான் என்று தெரிவித்து விட்டு ; அவ்வழிச் செம்மல் ஏகினான் : குறித்த வழியில் லக்ஷ்மணன் சென்றான்.

குறிப்பு :—சீதையை விட்டுச் செல்லத்தான் தோன்றுமா லக்ஷ்மணனுக்கு. என்ற கேள்விக்குக் காரணம் சொல்ல இயலாது. ஏதோ தேவர்கள் தவஞ் செய்தார்கள், அவர்களுக்காக ராவணனை வதம் செய்ய வேண்டும், அப்படி வதம் செய்வதற்காகவே லக்ஷ்மணன் அந்த இடத்தை விட்டுச் செல்லும்படி செய்கிறது விதி என்றுதான் சொல்ல வேண்டும்.]

* * *

லக்ஷ்மணன் போய்விட்டான். எப்போது அவன் போவான் என்று சமயம் பார்த்த வண்ணமாய் இருந்தான் ராவணன். காரியத்தைச் சாதிப்பதற்காக—அரக்கன் வருகிற வருகையைப் பாருங்கள் :

இளையவன் ஏகவும்
இறவு பார்க்கின்ற
வளை எயிற்(று) இராவணன்
வஞ்சம் முற்றுவான்,—
முளைவிரித் தண்டொரு
மூன்றும் முப்பகைத்
தளையரி தவத்தவர்
வடிவும், தாங்கினான்.

[இளையவன் ஏகவும் : லக்ஷ்மணன் அந்த இடத்தை விட்டுப் போகவும் ; இறவு பார்க்கின்ற : லக்ஷ்மணன் நீங்கும் சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த : (இறவு : நீங்குதல்) வளை எயிற்று இராவணன் ; வளைந்த பல்லையுடைய ராவணன்: வஞ்சம் முற்றுவான் : வஞ்சனையான தன் காரியத்தைச் சாதிக்கும் பொருட்டு : முளை விரித்தண்டு ஒரு மூன்றும் : இளம் மூங்கில் தண்டு மூன்றைக் கட்டிக் கையில் ஏந்தியவனாய் : முப்பகைத் தளை அரி தவத்தவர் வடிவும் : காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்று பகையாகிய கட்டுக்களை அரிந்த சன்னியாசிகளின் வேஷமும்,—தாங்கினான்.]

ராவணனுடைய வேஷம் மிக அதிசயிக்கத் தக்கதாகவே இருந்தது. நடிகக் கலையில் அவன் அபார சக்தி வாய்ந்தவனாய் இருந்திருக்கிறான். அபார திடகாத்திரமாயுள்ள அவன் தேகத்தை ஒருவிதமாய் ஒடுக்கி, ஏதோ நெடுநாளாகப் போதுமான ஆகாரமில்லாமல் உடல் மெலிந்ததாகத் தோற்றுகிறான். வெகு தூரத்திலிருந்து நடந்து வந்த காரணமாக ஏற்படும் வருத்தத்தையெல்லாம் நடிக்கிறான். ஆனால் நடிப்பென்று யாருமே சொல்ல முடியாது. உண்மை பாவம் அப்படி இருக்கிறது!

ஊண் இலனும்என
உலர்ந்த மேனியன்,
சேண்நெறி வந்ததோர்
வருத்தச் செய்கையன்,
பாணியின் நடத்திடைப்
படிக்கின் றான்என,
வீணையின் இசைபட
வேதம் பாடுவான்.

[ஊண் இலனும் என : போதுமான ஆகாரம் நெடுநாள் இல்லாதவன்போல : சேண் நெறி வந்ததோர் வருத்தச் செய்கையன் : வெகு தூரத்திலிருந்து வந்த களைப்பை மெய்ப்பாடுகளினால் காட்டுகிறான் : பாணியின் நடத்திடை : தாளத்தோடு கூடிய நடனம் ஒன்று நடக்க ; அதனிடை படிக்கின்றான் என்று தோன்றும்படியாக ; வீணையின் இசைபட : வீணையின் இசையும், ஒத்து பாவங்களைக் காட்டி வாசிக்க ; வேதம் பாடுவான் : பக்திமயமான பாடல்களைப் பாடிக் கொண்டு வருகிறான்.]

ஆயிரக் கணக்கான வருஷங்களாகத் தமிழ் நாட்டுக் கோயில்களில் நடனத்தோடு அபூர்வமான பக்தி பாவங் கொண்ட பாடல்களைப் பாடி வந்திருக்கிறார்கள். அவை கம்பருடைய மனக் கண்முன் சதா நிற்பவை. அப்படி அனுபவித்த பக்திமயமான பாடல்களையும், அபிநயங்களையும் ராவணன் மூலமாகச் சித்திரித்துக் காட்டுகிறார். தமிழ் நாட்டு இசைக் கலை பூர்வத்திலும் உண்மையான பாவம் நிறைந்திருந்த தென்று செய்யுளில் நன்றாய்த் தெரிகிறது.



உங்களுக்கு
ஆஸ்பிரின் —
தேவையான
சமயத்தில்
Alasil
TABLETS
Aspirin with a Difference
சாப்பிட்டு
வித்தியாசத்தை கவனியுங்கள்!
இவைகளுக்கு "அலாஸில்" சாப்பிடுங்கள் தலைவலி, ஜலதோஷம் பல்வலி, நரம்பு வலி, வாதவலி இடுப்பு வலி, இடுப்புச் சந்து வாதம், விட்டு விட்டு வரும் சகல வலிகள், நாக்கமின்மை புளிப்பினுல் ஏற்படும் ஜீர்ண கோளாறுகள்.
எல்லா மருந்து வியாபாரிகளிடமும், ஸ்டோர்களிலும் கிடைக்கும்.
அவைகள் புது மாதிரியாகவும் அபிவிருத்தி செய்யப்பட்ட ஆஸ்பிரினுகவும் இருப்பதால் "அலாஸில்" வில்லைகள் வைத்தியர்களால் கெடுதி இல்லாமலும் சீக்கிரமாகவும் வலியைப் போக்க ரொம்ப காலமாக குறிக்கப்பட்டு வருகின்றன. மிகவும் சுத்தமான ஆஸ்பிரினுடன் "அலாஸில்" வில்லைகளில் அலோகால் என்ற அங்கீகரிக்கப்பட்ட சக்தியுள்ள அன்றுசயத்திற்குரிய புளிப்பு மாற்றுனும் சேர்ந்து இருக்கிறது.
இந்த காரணத்தினால் "அலாஸில்" வில்லைகள் வயிற்றிலோ அல்லது ஜீர்ண காரியத்திலோ அதிருப்தியான பிற்பயன் உண்டாக்குவதில்லை. எதிரிடையாக அவைகள் அஜீர்ணத்தை நீக்குவதற்கு உதவி அளிக்கின்றன. இப்படியாக நீங்கள் சீக்கிரத்தில் வலியினின்று யாதொரு பிரதிகூலமும் இல்லாமல் விடுதலை அடைகிறீர்கள்.
அடுத்த தடவை உங்களுக்கு ஆஸ்பிரின் தேவையான சமயத்தில் பெரிய வித்தியாசமானதும் அதிக பிரயோஜனம் கொடுக்கக் கூடியதுமான "அலாஸில்" ஐச் சாப்பிட்டு வித்தியாசத்தை கவனியுங்கள்.
புதிய அபிவிருத்தி செய்யப்பட்ட மாதிரியான ஆஸ்பிரின்.
வினியோகஸ்தர்கள்:
கிரஹாம்ஸ் டிரேடிங் கம்பெனி (இந்தியா) லிமிடெட்
தபால் பெட்டி நெ. 1205, மதராஸ்
மேலும் பம்பாய், கராச்சி, கல்கத்தாவிலும் உள்ளன.





பேதை சுமித்திரா

லீலா

சந்திரசேகரன் சாதாரண குடும்பத்தில்தான் பிறந்தவன். அவன் தகப்பனார் சர்க்கார் உத்தியோகத்தில் சாதாரண சம்பளத்தில்தான் இருந்தார். சிறிது பூஸ்திதி உண்டு. இவனைத் தவிர ஒரு பெண்ணையும் பெற்று வைத்துவிட்டு, அவன் தாயார் பல வருஷங்களுக்கு முன்பே இறந்துவிட்டாள். விதவையான அத்தை ஒருத்தி இவர்களுடன் வீட்டிலேயே இருந்து கொண்டு குடும்பத்தை நடத்தி வந்தாள்.

தாயின் அன்பு என்பதைக் கண்டிராத அவன், தந்தையிடமே வாத்ஸல்யத்தை வைத்திருந்தான். அவரும் இவனிடம் மிகவும் அன்புடையவர். தங்கைக்குப் பதினைந்து வயதில் விவாகம் நடந்து, அவள் கணவனுடன் குடும்பம் நடத்த வடக்கே சென்றுவிட்டாள். அத்தையும் சிறிது காலம் சென்றபின் காலகதி யடைந்து விட்டாள். வீட்டில் தகப்பனார், பிள்ளை, ஒரு சமையற்காரன் — மிகவும் சிக்கனமாக நடைபெற்று வந்தது குடும்பம்.

அப்பொழுது அவன் ராஜதானிக் கலாசாலையில் ரஸாயன ஆனர்ஸ் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். புத்திசாலி. ஒவ்வொரு வகுப்பிலும் முதற் பரிசு வாங்கிக் கொண்டு வந்தான். ஆனர்ஸ் பரீக்ஷையிலும் அப்படியே. ராஜதானியில் முதல் ஸ்தானத்தை அடைந்தான். அப்புறம் கேட்க வேண்டுமா? பெரிய பெரிய மனிதர்களெல்லாம் "நான், நீ!" என்று போட்டி போட்டுக்கொண்டு அவனுக்குப் பெண் கொடுக்க முன் வந்தார்கள். தகப்பனாருக்கு மிகவும் சந்தோஷம். யாராவது பெரிய மனிதரான சம்பந்தியாகப் பிடித்துவிட வேண்டும் என்று ஆசை. அவருடைய பொருளாதார நிலைமையை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்காக மட்டுமல்ல; பையனுக்கும் பெரிய வேலையாக வாங்கிக் கொடுப்பாரே என்ற எண்ணமும் கூடத்தான். ஆகவே, வந்த வரன்களையெல்லாம் நிராகரித்து, "ஓடு மீன் ஓட உறு மீன் வருமளவும் வாடி யிருக்குமாம் கொக்கு!" என்ற மாதிரி, அவர் மிகவும் பெரிய இடமாக வரும் வரை காத்துக் கொண்டிருந்தார்.

சந்திரசேகரனோ இதிலெல்லாம் தலையிடவே யில்லை. அவனுக்கு ரஸாயன ஆராய்ச்சியில் மிகவும் பற்றுதல் உண்டு. ஜெர்மன், அமெரிக்கா, பிரிட்டன் முதலிய தேசங்களிலிருந்து வரும் ரஸாயனப் பத்திரிகைகளையெல்லாம் தவறாமல் படிப்பான். ஆனர்ஸ் பரீக்ஷையில் தேறியவுடன், சர்வ கலாசாலையில் உபகாரச் சம்பளம் பெற்று ரஸாயன ஆராய்ச்சியாளனாக அமர்ந்தான். அதில் பெயர் எடுக்கவேண்டும், தன் தேசத்தில் இவ்வித ஆராய்ச்சியை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதே அவனது அபிலாஷை. அதற்காக இரவும் பகலும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தான். ஆகவே, தன்னைச் சுற்றி நடைபெறும் விஷயங்க

னெல்லாம் அவனுக்கு அர்த்தமற்றவை போல் தோன்றின.

அப்பொழுதுதான் திவான்பகதூர் சுந்தரமையரும், அவருடைய பெண் சுமித்திராவும் அவன் வாழ்க்கையில் பிரவேசித்தார்கள். சுந்தரமையர் அவனுடைய தகப்பனாரின் பழைய சிநேகிதர். இருவரும் ஒரே பள்ளிக்கூடத்தில் படித்தவர்கள். ஆனால் வாழ்க்கையின் விசித்திரத்தில், பால்ய நண்பர்களில் ஒருவன் பல லக்ஷங்களுக்கு அதிபதியானான்; மற்றொருவனோ மாதம் நூற்றைம்பது ரூபாய்க்குத் தினம் எட்டு மணி நேரம் உழைக்கவேண்டியிருந்தது.

சுந்தரமையர் சர்க்கார் உத்தியோகத்திலிருந்து ரிடையர் ஆன பிறகு வடக்கேயுள்ள சுதேச சமஸ்தானங்களொன்றில், வழக்கமாகக் கிடைக்கும் திவான் பதவி அவருக்கும் கிடைத்தது. அங்கேயே ஆறு வருஷங்கள் இருந்தார். போகும்பொழுது சுமித்திராவுக்கு வயது பத்து. இப்பொழுது பதினாறு. கொடிபோன்ற உடம்பு; சௌந்தரியமான முகம்; அகலமான நெற்றி; ஸ்திர புத்தியைக் காண்பிக்கும் பார்வை; பிறர் பிரியப்படும்படியான மனோஹரப் பேச்சு! ஆனால்......அவள் நிறம் மாநிறம் கூட அல்ல; கல்ல கறுப்பு!

ஆண் கறுப்பாயிருந்தால் பரவாயில்லை. பெண் கறுப்பாய்ப் பிறந்து விட்டாலோ அப் பெண்ணின் பெற்றோர்களுக்குத் தூக்கமே கொள்ளாது. அதிலும் சாதாரண குடும்பங்களில் கறுப்பாகப் பெண் பிறந்து விட்டால் கேட்கவே வேண்டாம்.

சுந்தரமையருக்கு மேற்கூறிய கவலை ஒன்றுமில்லை. எவ்வளவோ பேர் பணத்துக்கு ஆசைப்பட்டு அவருடைய மாப்பிள்ளையாக வர விரும்புவார்கள். ஆனால், அவரது மனைவி பத்து வருஷங்களுக்கு முன் காலஞ் சென்றதிலிருந்து தம் பெண்ணை அன்பாக நடத்தி, சந்தோஷமாக வைத்துக்கொள்ளும் மாப்பிள்ளை அகப்பட வேண்டுமே என்ற கவலைதான்.

ஆகவே, சுந்தரமையர் சந்திரசேகரனின் தகப்பனாரைப் பழைய சிநேகிதர் என்ற முறையில் நெருங்கினார். ஏழையாயிருந்தால் பரவாயில்லை. பையன் நன்றாகப் படித்திருக்கிறான். புத்திசாலி. வாழ்க்கையில் எது சிலாக்கியம் என்று தெரிந்தவனாயிருப்பான் என்றெல்லாம் எண்ணினார்.

சந்திரசேகரனின் தகப்பனாருக்கோ பரம திருப்தி. "சுந்தரமையர் பெரிய சொத்துக்காரர். சுமித்திரா அவருடைய ஒரே பெண். கறுப்பாயிருந்தால் என்ன? முகத்தில் களை இல்லையா? படிப்பில்லையா? அவளுக்கு என்ன குறைவு? சம்பந்தமோ பெரிய இடத்துச் சம்பந்தம். தன் மகனுக்கு இதைவிட வேறு என்ன அதிர்ஷ்டம் வேண்டும்? மேல் படிப்புக்குப் பையனைச் சீமைக்குக்கூட அனுப்பச் சொல்லலாம்" என்றெல்லாம் எண்ணினார்.

பையனிடமும் இதைப்பற்றிப் பேச ஆரம்பித்தார். மிகவும் வற்புறுத்தியே பேசினார்.



வெறும் வெளியழகு மட்டும் போதாது; உள்ளழகு, மனத்தழகு வேண்டும் என்று தத்வார்த்தமாகவும் பேசினார். அவனுக்கோ இதெல்லாம் பிடிக்கவில்லை. ஆனாலும் தகப்பனாரிடமிருந்த மரியாதை "முடியாது" என்று சொல்லவும் அவனை அனுமதிக்கவில்லை.

கல்யாணம் விமரிசையாக நடைபெற்றது. டாக்டர் பட்டம் பெற்று விட்டதைத் தெரிவிக்கும் சர்வ கலாசாலையாரின் கடிதமும் கல்யாணத் தினத்தன்றே கிடைத்தது. "பெண்ணின் அதிர்ஷ்டம்!" என்று எல்லோரும் சுமித்திராவைப் புகழ்ந்தனர். இந்த விஷயத்தில் சந்திரசேகரனுக்குச் சிறிது மனத்தாங்கல். "நான் கஷ்டப்பட்டு வேலை செய்த ஆராய்ச்சிக்காகப் பட்டம் பெற்றால் இவளுடைய அதிர்ஷ்டமாவது, ஒன்றாவது! இவளில்லாவிடில் பட்டம் பெற்றிருக்க மாட்டேனா?" என்று நினைத்தான்.

கல்யாணக் கோலாகலங்களெல்லாம் ஒருவாறு முடிந்தபிறகு, மீண்டும் ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்காகத் தன் ஊருக்குத் திரும்பி விட்டான் சந்திரசேகரன். அப்பொழுது சுமித்திராவிடமிருந்து வந்த நாலைந்து கடிதங்களுக்கு அவன் பதிலே எழுதவில்லை. ஆயினும், பேதைப் பெண் சுமித்திரா அவனுக்குக் கடிதம் எழுதிக் கொண்டேயிருந்தாள்.

இப்படியே சில மாதங்கள் சென்றன. திடீரென்று அவன் மாமனாரே ஒருநாள் அங்கு வந்து விட்டார். பெரிய வேலைக்காகச் சிபார்சு செய்திருப்பதாகவும், அது நிச்சயம் கிடைத்து விடுமென்றும், அதில் சேருமுன் ஒரு மாதம் அங்கு வந்து இருந்துவிட்டுப் போக வேண்டுமென்றும் பரிவாகக் கேட்டுக் கொண்டார். ஆனால் சந்திரசேகரனோ அசைவதாக இல்லை. தான் பிச்சைக்காரனல்லவென்றும், தனக்கு உத்தியோகம் தேடிக்கொள்ளத் தனக்கே சாமர்த்தியமிருப்பதாகவும் பதில் சொல்லி அனுப்பி விட்டான்.

2

சில நாட்களுக்கெல்லாம் மைசூர் மலைப் பிரதேசத்தில் ஒரு தேயிலை, காப்பி எஸ்டேட்டில் சந்திரசேகரனுக்கு ஆராய்ச்சி வேலை கிடைத்தது. உடனே அதை ஏற்றுக் கொண்டான். நிர்மானுஷ்யமான இடத்தில் வாழ்க்கையைக் கழித்துத் தன் வாழ்நாட்களை விஞ்ஞானத்துக்கே அர்ப்பணம் செய்துவிட வேண்டுமென்று அவன் தீர்மானித்தான்.

சந்திரசேகரன் மைசூர் எஸ்டேட்டுக்கு வந்து எப்படியோ மூன்று மாதங்கள் கழிந்துவிட்டன. ஒரு நாள் காலை வீட்டு வேலைகளைப் பார்த்துக்கொள்ள அமைக்கப்பட்டிருந்த மலையாளிப் பையன் கொண்டுவந்த காப்பியைக் குடித்துக்கொண்டிருந்த அவன், தன் தகப்பனாரும் அவரைப் பின்பற்றிச் சுமித்திராவும் வந்ததைப் பார்த்துத் திடுக்கிட்டான்.

"உன்னுடைய சொத்தை உன்னிடம் ஒப்படைக்கத்தான் வந்தேனப்பா! அப்புறம் நீ யாச்சு, அவளாச்சு! அக்கினி சாட்சியாக மணந்த பெண் மனம் நோகவிடுவது மகா பாபம்! குழந்தையும் எப்படிப் போய்விட்டாள், பார்! ஒரே ஏக்கம் அவளைப் பிடுங்கித் தின்கிறது. புத்திசாலியான உனக்கு நான் இதற்குமேல் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. இனிமேல் உன் இஷ்டம். நான் போய் வருகிறேன்!" என்று தணிவாகவும், அன்பாகவும் சொல்லிவிட்டு, அவனுடைய தகப்பனார் ஒரு வாய்க் காப்பிகூடக் குடிக்காமல் உடனே போய்விட்டார்.

அப்புறம் என்ன நடந்ததென்று அவனுக்கே தெரியவில்லை. அவள் வந்ததைக் கவனிக்காதவன்போல் ஸ்நானம் செய்துவிட்டுத் தன் வேலைக்குச் சென்றுவிட்டான். மத்தியானம் சாப்பிடுவதற்குக்கூட அவன் வரவில்லை. மாலை திரும்பும்போது ஆறு மணி இருக்கும். வழக்கம்போல் மேல் சட்டையை அவிழ்த்துவிட்டு, சாய்மான நாற்காலியில் "அப்பாடா!" என்று சாய்ந்துகொண்டான். அருகிலிருந்த சிறிய மேஜையின்மீது காப்பி வைக்கப்பட்டிருந்தது. அன்று காப்பி மிகவும் ருசியாகப் போடப்பட்டிருப்பதைக் கண்டு அவன் வியந்தான்.

காப்பியைக் குடித்துவிட்டுத் தன் அறைக்குச் சென்றவுடன் அங்கே மற்றொரு அதிசயம் அவனுக்காகக் காத்திருந்தது. ஒரே குப்பையும் கூளமுமாக இருந்த மேஜை சுத்தமாகத் துடைக்கப்பட்டு, புத்தகங்களெல்லாம் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஜன்னலோரத்திலிருந்த மைக்ராஸ்கோப் மேஜை, அதன் விளக்கு முதலியவைகூடச் சுத்தம் செய்யப்பட்டிருப்பதையும், சுவரிலுள்ள கலாசாலைப் போட்டோக்கள் துடைக்கப்பட்டிருப்பதையும் காணக் காண அவனுக்குக் கோபம் ஒரு புறமும், ஆச்சரியம் ஒரு புறமும் உண்டாயிற்று. பையனைக்

கேட்டதில் அவன் தனக்கொன்றும் தெரியாதென்றும், காலையில் வந்த பெண் அவனை அந்தந்த அறையைப் பற்றிக் கேட்டதாகவும், தான் அதையெல்லாம் காண்பித்ததாகவும், அப்புறம் அந்தப் பெண்ணே எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தினதாகவும் தகவல் தெரிந்தது. இதில் அவனுக்குச் சிறிது பொறாமைகூட. தன்னால் சுத்தமாக வைத்துக் கொள்ள முடியவில்லை என்றல்லவா ஏற்படும் என்ற எண்ணம்தான் அதற்குக் காரணம்.

கடைசியாக அவன் அவளுடைய அறைக்கு வந்தான். அது முன்பு உபயோகப்படாத சாமான்கள் போட்டு வைக்கப்பட்டிருந்த அறை. இப்பொழுதோ அது ஒரு தனிச் சோபையுடன் விளங்கிற்று.

இது என்ன? தன் போட்டோ இங்கு எப்படி வந்தது? அவளுக்குத் தான் போட்டோ ஒன்றும் கொடுத்ததாக ஞாபகமில்லையே!......ஆம், இது தன் தகப்பனாரின் வேலை!

3

பல மாதங்கள் சென்றன. சுமித்திரா இன்னும் அவனுடைய அன்புக்குப் பாத்திரமாகவில்லை. ஒரு நாள் மாலை சந்திரசேகரன் வழக்கம்போல் வெளியே உலாவச் சென்ற பொழுது, அவளே அவனைக் கேட்டு விட்டாள். "நான் என்ன செய்தேன், உங்களுக்கு? ஜீவனில்லாத கண்ணாடிக் குழாய்களின் மேலும் கோப்பைகளின் மேலும் வைக்கும் அன்பில் ஆயிரத்தில் ஒரு பங்கையாவது என் மேல் வைக்கக் கூடாதா?" என்றெல்லாம் பல மாதங்களாகத் தன் மனதில் குமுறிக் கொண்டிருந்த ஆசையை அன்று வெளியிட ஆரம்பித்தாள். அவன் மனம் கரையவில்லை. "நான் உன்னை விரும்பவில்லை. தகப்பனார் சொல்லுக்காகவே உன்னை இங்கே யிருக்க விட்டிருக்கிறேன்!" என்றான்.

நளாயினி, அனுசூயா முதலியவர்களுடைய வாழ்க்கைச் சரித்திரத்தை அறிந்திருந்த சுமித்திராவுக்கு அவன் சொன்னது குற்றமாகத் தோன்றவில்லை. இன்று இல்லாவிடில் இன்னும் சில மாதங்கள், சில வருஷங்கள் கழித்தாவது தன் கணவனது அன்புக்குத் தான் பாத்திரமாகலாம் என்ற நம்பிக்கையுடன் இருந்து வந்தாள்.

மறுநாள் மாலை வீட்டுக்குத் திரும்பிய சந்திரசேகரன் ஸ்திரமாக நடக்க முடியாமல் தள்ளாடிக் கொண்டே வந்து சேர்ந்தான். காப்பிக் கோப்பையுடன் அங்கு வந்த சுமித்திரா அவனைப் பார்த்துத் திடுக்கிட்டாள். "உங்களுக்கு என்ன உடம்பு? ஏன் இப்படி சோர்ந்து போயிருக்கிறீர்கள்?" என்று பரிவுடன் கேட்டுக் கொண்டே அவனை நெருங்கி நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். ஜுரம் கனவேகமாக அடித்துக் கொண்டிருந்தது. "இதென்ன, அனல்போல் காய்கிறதே! எப்பொழுது இதுமாதிரி ஆரம்பித்தது?" என்று கேட்டவாறே, மெதுவாக அவனைத் தன் தோளில் சார்த்தியவாறு படுக்கை அறைக்கு அழைத்துச் சென்றாள். அங்கே அவனைப் படுக்கவைத்துக் கம்பளியை எடுத்துப் போர்த்திவிட்டுக் காப்பியைக் கொண்டுவந்து கொடுத்தாள்.

டாக்டர் வருமளவும் சுமித்திராவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவர் வந்ததும் அவனைப் பரிசோதனை செய்தார். "ஒன்றும் கவலைப்பட வேண்டாம். இது மலேரியா. ஆனால் மிகவும் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்" என்று சொல்லிச் சென்றார்.

அதற்குப் பிறகு மூன்று நாட்கள் எப்படிச் சென்றன என்று அவனுக்கோ, அவளுக்கோ தெரியாது. இயந்திரம்போல் மருந்து கொடுப்பதிலும், நெற்றியில் ஐஸ் பையினால் ஒத்தடம் கொடுப்பதிலும், டாக்டரிடம் அவனுடைய உடம்பைப் பற்றிக்



"அதோ போகிறாரே, அவர் டிராமாவிலே ஆக்ட் பண்ணியே ரெண்டு வீடு கட்டிவிட்டார், ஸார்! பாருங்க, அவர் அதிர்ஷ்டத்தை?"

"அட! அவர் அவ்வளவு பெரிய ஆக்டரா?"

"இல்லே ஓய்! அவர் ஆக்ட் பண்ணுறப்போ வந்து விழுந்த கற்களையெல்லாம் ஒன்று விடாமல் பொறுக்கியெடுத்துக் கொண்டாராம்!"

கேட்பதிலுமே அவன் காலம் சென்றது. நான்காவது நாள் சாயங்காலம் அவனுக்கு 'டெம்பரேசர்' சற்று இறங்கி யிருந்தது. காப்பியைக் கொடுத்துவிட்டு, "இப்பொழுது எப்படி யிருக்கிறது உடம்பு? தேவலையா?" என்று கேட்டாள்.

"ஆம்" என்று அவன் தலை யசைத்தான்.

அவள் கைகள் காப்பிக் கோப்பையைத் திருப்பி எடுத்துக் கொள்ளும்போது சந்திரசேகரனின் கைவிரல்கள் சற்று உராய்ந்தன. அவனுக்கு இன்னதென்று வர்ணிக்க முடியாத ஒரு குதூகலம்—ஒருவிதமான மனக் கிளர்ச்சி!

மறு நாள் காலை அவனுடைய தகப்பனாரும் திவான்பகதூர் சுந்தரமையரும் வந்து சேர்ந்தார்கள். "என்ன மாப்பிள்ளை! திடீரென்று எங்களை ஒரேயடியாய்க் கலங்க வைத்து விட்டீரே? இப்பொழுது எப்படி இருக்கிறது? தேவலையா? உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளக் கூடாதா?" என்றெல்லாம் பரிவாகவும், அன்பாகவும் பேசிக்கொண்டே போனார்கள். அவனுக்கோ அவமானம் தாங்கவில்லை. இவர்களை யெல்லாம் முன்பு எவ்வளவு மனக் கஷ்டத்தில் ஆழ்த்தி விட்டோம் என்ற வருத்தம்.

அவர்கள் அங்கு வந்ததில் ஒரு காரியம் நிறைவேறிற்று. அதாவது, அவன் ஒரு மாத ரஜா எடுத்துக் கொண்டு வேறு எங்காவது போக வேண்டும். உடம்பை நன்றாகத் தேற்றிக் கொண்ட பிறகுதான் இந்த மலைப்பிராந்தியத்துக்குத் திரும்ப வேண்டும் என்று நிச்சயித்துக் கொண்டார்கள்.

திவான்பகதூர் சுந்தரமையருக்கு அடையாறில் ஒரு பங்களா இருந்தது. ஆனால் அவர் அங்கு வசிப்பதில்லை. தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள அவருடைய கிராமத்தில் தான் இருப்பது வழக்கம். ஆயினும், இப்பொழுது எல்லாரும் அங்கு சென்று ஒரு மாதம் இருப்பதென்று தீர்மானம் செய்தனர். அதன்படி சம்பந்திகள் இருவரும் மறுநாளே சென்று விட்டார்கள். சுமித்திராவும் சந்திரசேகரனும் லீவு கிடைத்தவுடன் வருவதாக முடிவாயிற்று.

இரண்டு தினங்கள் கழித்து எஸ்டேட் மானேஜரிடம் சந்திரசேகரன் லீவு பெற்றுக் கொண்டான். அதுவரை அவனுக்குச் சுமித்திராவிடம் மன்னிப்புக் கேட்க அவகாசமோ, சந்தர்ப்பமோ ஏற்படவில்லை. அன்றிரவு பத்து மைல் தூரத்திலுள்ள ஸ்டேஷனுக்குக் காரில் போகும்பொழுது அவன் இருதயத் துடிப்பு காரின் வேகத்தை விட அதிகமாக இருந்தது. அவளிடம் பேச வேண்டுமென்று அவன் உள்ளம் துடியாய்த் துடித்தது. ஆனால், வார்த்தைகள் ஒன்றும் வெளி வரவில்லை.

* * *

அன்று மாலை தம்பதிகள் இருவரும் கடற்கரைக்கு உலாவச் சென்றிருந்தனர். பௌர்ணமி தினத்துச் சந்திரன் வெள்ளிக் கடலில் உதித்த காட்சியும், அந்த வெள்ளிக் கிரணங்களால் சுற்றி அடர்ந்திருந்த சவுக்குமரத் தோப்புகள் சௌந்தரிய வனமாக மாறின காட்சியும், தலையிலே சூடிய மல்லிகை மலர்க் கொத்துடன் அருகே அமர்ந்திருந்த சுமித்திராவின் சோபையும் சந்திரசேகரனின் மனதைக் கொள்ளை கொண்டன.

"என்னை மன்னிப்பாயா, சுமி?" என்று அத்தனை நாளும் அடக்கி வைத்துக் கொண்டிருந்த கேள்வியை அவன் அன்று கேட்டே விட்டான்.

"மன்னிப்பதா? நானா? எதற்கு?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் சுமித்திரா.

"எதற்கா? என்னுடைய மிருகத்தனத்துக்கு, சுயாலத்தன்மைக்கு, இளம் பெண்ணின் மனதைச் சொல்லம்பால் குத்தியதற்கு......!" என்று அடுக்கிக்கொண்டே போனான் அவன்.

சுமித்திரா ஒன்றும் பதிலளிக்கவில்லை. அவளுடைய கண்களில் ஒரு துளி கண்ணீர் தான் காணப்பட்டது. அவன் மௌனமாக அவளுடைய கைகளை எடுத்துத் தன் கைகளுக்குள் வைத்துக் கொண்டான்.

அன்று முதல் சந்திரசேகரன் தான் புதிதாக அறிந்துணர்ந்த அன்புப் பெருக்கை அள்ளி யள்ளிப் பருக ஆரம்பித்து விட்டான். அவன் ஒரு குழந்தை புதிதாகத் தனக்கு அளிக்கப்பட்ட விளையாட்டுச் சாமானை அறிய விரும்புவது போல், சுமித்திராவின் நோக்கங்களையும், மனச் சாயல்களையும் பற்றிக் கணக்கற்ற கேள்விகளைக் கேட்டு அறிந்துகொள்ள ஆவலுற்றான். அவளுக்குத் தன் வாழ்க்கையின் லட்சியங்கள் யாவை, அதற்காகத் தான் பட்ட பாடுகள் எத்தனை என்பதையும் அவளிடம் தெரிவிக்க ஆரம்பித்தான். இப்படி ஒருவர் மனதை மற்றொருவருக்கு வெட்ட வெளிச்சமாய்த் தெரியப்படுத்திக் கொள்வதில் உண்டாகும் பரஸ்பர கட்டுக்கு இந்த உலகத்தில் ஈடேது, இணையேது?

பூவும் வண்டும்

என். பத்மா

முன்னொரு காலத்தில் ஒரு முனிவர் இருந்தார். அவர் ஒரு காட்டின் மத்தியில் ஒரு சிறிய குடிசை அமைத்துக்கொண்டு அதில் வசித்து வந்தார். அவருக்குத் தயானந்தன் என்று ஒரு சிஷ்யன் இருந்தான். அவன் தினம் அதிகாலையில் எழுந்து குருவின் பூஜைக்காகக் காட்டிலுள்ள பூக்களைப் பறித்துக் கொண்டு வருவான். குரு வெளியே செல்லும்போது அவன் வீட்டில் தங்கியிருந்து வேறு வேலைகளைக் கவனிப்பான்.



ஒரு நாள் தயானந்தன் காட்டில் பூக் கொய்யும்போது அவ்வழியே சென்று கொண்டிருந்த ஏழைச் சிறுமி ஒருத்தியைச் சந்தித்தான். அச் சிறுமியின் முகம் வாட்ட முற்றிருந்தது. தயானந்தன் அந்தப் பெண்ணைப் பார்த்து, "ஏன் உன் முகம் சோர்வுற்றிருக்கிறது?" என்று கேட்டான். அதற்கு அப் பெண், "எனக்குத் தாய் தந்தை ஒருவரும் இல்லை. நான் ஓர் அனாதை. ஒருவர் வீட்டில் வேலை செய்து பிழைத்துக் கொண்டிருந்தேன். அவர்கள் வீட்டில் ஏதோ காணமற் போய் விட்டது என்பதை வைத்துக்கொண்டு என் மேல் பழி சுமத்தித் துரத்தி விட்டார்கள். எனக்கு வேறு ஒரு இடத்திலும் வேலை கிடைக்கவில்லை. இரண்டு நாட்களாகப் பட்டினி. இந்தக் காட்டிலுள்ள மரங்களிலிருந்தாவது பழங்கள் பறித்துத் தின்னலாம் என்று எண்ணி இங்கு வந்தேன்" என்று சொல்லி அழுதாள்.




தயானந்தன், "நீ என்னுடன் என் குருவினுடைய குடிசைக்கு வா! என்னோடு நீயும் ஆசிரம வேலைகளைச் செய்யலாம்" என்று அச் சிறு பெண்ணைக் குருவின் குடிசைக்கு அழைத்துச் சென்றான்.

மறு நாளிலிருந்து இருவரும் சேர்ந்து பூஜைக்குப் பூப் பறிப்பதற்குச் செல்லத் தொடங்கினார்கள். இருவரும் நிதானமாகப் பேசிக் கொண்டே செல்லுவதனால் குருவின் பூஜைக்குச் சரியான நேரத்தில் பூ கொண்டுவர முடியவில்லை.



இதைப் பார்த்த குரு ஒரு நாள் தயானந்தனைக் கூப்பிட்டுக் கண்டித்து மறு தினத்திலிருந்து சரியான நேரத்தில் பூஜைக்குப் பூ கொண்டு வருமாறு கட்டளையிட்டார். ஆனால் தயானந்தன் குருவின் வார்த்தைக்குச் செவி சாய்க்காமல் தினத்தை விட நேரங் கழித்தே வந்தான். குருவுக்குத் தாங்க முடியாத கோபம் வந்து விட்டது. அன்று தயானந்தன் வந்ததும், "என் வார்த்தையைப் பொருட்படுத்தாமல் நீ நேரங்கழித்து வருகிறாய். அந்தச் சிறு பெண்ணுடன் சேர்ந்ததிலிருந்து உனக்கு என்னுடைய



வார்த்தை காதில் ஏறுவதில்லை. ஆகையினால், இன்றிலிருந்து அந்தப் பெண்ணை ஒரு ரோஜா மலராக மாறும்படிச் சாபமளிக்கிறேன். நீ என்னிடம் பல வருஷங்களாக இருந்து வருகிறபடியால் உன் மனதைப் புண்படுத்த எனக்கு இஷ்டமில்லை!" என்று சொன்னார். உடனே அந்தப் பெண் ரோஜா மலராக மாறிவிட்டாள்.

தயானந்தனுக்கு வருத்தம் தாங்கவில்லை. தோட்டத்து ரோஜாச் செடியில் தன் தோழி ரோஜாப் பூவாக மாறி நிற்பதைப் பார்க்கும்போதெல்லாம் அவனுக்குத் துக்கம் துக்கமாக வந்தது.

எனவே அவன் ஒரு நாள் குருவை அணுகி, "ஸ்வாமி, என் தோழி ரோஜாப் பூவாக மாறிவிட்டதைப் பார்க்க எனக்கு ரொம்பவும் வருத்தமாயிருக்கிறது. அவளோடு இவ்வளவு நாட்கள் சிநேகமாகப் பழகிவிட்டு, அவளைச் செடியிலிருந்து பறிப்பதென்றால் எனக்குக் கொஞ்சங்கூட மனம் வரவில்லை. ஆகையினால் என்னிடம் கருணை கொண்டு என்னை ஒரு வண்டாக மாற்றி விடுங்கள். நான் வண்டு ரூபத்துடன் என் தோழி ரோஜாப் பூவைச் சுற்றிச் சுற்றி வந்து ஆனந்தப் படுவேன்!" என்றான்.

குருவும் அவனிடம் இரக்கம் காட்டி அடுத்த கணமே அவனை ஒரு வண்டாக மாற்றிவிட்டார்.

வண்டு ரூபமடைந்த தயானந்தனும் அந்த ரோஜாப் பூவைச் சுற்றிச் சுற்றி வந்து சந்தோஷத்துடன் ரீங்காரம் செய்ய ஆரம்பித்துவிட்டான்.

அன்றைய தினத்திலிருந்துதான் வண்டுக்கும் பூவுக்கும் சிநேகம் ஏற்பட்டது. இப்பொழுதுகூட மலரைச் சுற்றி வண்டுகள் கூட்டம் கூட்டமாக வட்டமிடுவதை நீங்கள் பார்க்கிறீர்களல்லவா?

இவளா மாமி?

எஸ். கிருஷ்ணன்

சிவராமன் பி. ஏ. பட்டம் பெற்றவனா-யிருந்தால்தான் என்ன, சர்க்கார் ஆபீஸ் ஒன்றில் மாதம் அறுபது ரூபாய் சம்பளம் வாங்கினான் என்றால்தான் என்ன, அவனுடைய தாயாரின் கண்களுக்கு அவன் வாயில் விரல் வைத்தால் கடிக்கத் தெரியாத குழந்தையாகவேதான் தோற்றமளித்தான். இருபத்திரண்டு வயதான அவன் தினமும் ஆபீசுக்குக் கிளம்பும்போது தாயார், "வழியில் மோட்டார், டிராம் வண்டி எல்லாம் வரும். எங்கேயோ நினைவாயில்லாமல் வழியை ஞாபகப்படுத்திக் கொண்டு போ!" என்று புத்திமதி கூறி யனுப்புவாள்.

சிவராமன் மத்திய சர்க்காரால் நடத்தப்படும் ஒரு பரீக்ஷைக்காகத் தயார் செய்து கொண்டிருந்தான். அவன் பரீக்ஷை கொடுப்பதற்காக டில்லிக்குப் போகவேண்டி யிருந்தது. அவனுடைய மாமா ஒருவர் டில்லியில் இருந்தார். அவர் பத்து வருஷங்களுக்கு முன் தென்னாட்டுக்கு வந்தபோது அவரைப் பார்த்ததுதான். அதற்கப்புறம் அவர் சென்னைப் பக்கம் வரவேயில்லை. அவரிடமிருந்து வருஷத்துக்கு இரண்டு கடிதம் வந்தால் அதிகம். இவ்வளவுதான் அவர்களிடையே இருந்த தொடர்பு. நான்கு வருஷங்களுக்கு முன் சிவராமனுடைய மாமி இறந்துவிட்டதாகத் தகவல் வந்தது. சில காலத்துக்குப் பின் அவனுடைய மாமா மறு விவாகம் செய்து கொண்டார் என்று தகவல் கிடைத்தது. "ஐம்பது வயதாயிற்று. மூன்று பெண்களுக்கும் மாப்பிள்ளைகள் வந்தாயிற்று. பேரன் பேத்தி எடுத்தாயிற்று. இன்னும் இவன் ஏன் கலியாணம் பண்ணிக் கொண்டான்?" என்று எண்ணினாள் சிவராமனின் தாயார். ஒரு சிறுமியின் வாழ்வை சுகமாக்கத் துணிந்த அந்த மாமனிடம் சிவராமனுக்கும் வெறுப்புத்தான் தோன்றியது. ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிறார், அவருடைய மென்மையான உணர்ச்சிகளைப் பணம் உறிஞ்சிக் கொண்டு விட்டது என்றது அவன் மனம்.

அவன் டில்லிக்குக் கிளம்பும் முன் தாயார், "நீ டில்லி வந்து சேர்ந்ததாக உன் மாமனிடமிருந்து எனக்குக் கடிதம் வந்தால்தான் சமாதானம் ஆகும். எனக்கு இருப்பது கருவேப்பங் கன்று மாதிரி ஒரு குழந்தை. போன இடத்திலே ஹோட்டலிலே கிட்டலிலே சாப்பிடாமல் பச்சை ஜலத்திலே குளிக்காமல் உடம்பைப் பார்த்துக் கொள்!" என்று சொல்லியிராவிட்டால், அவன் டில்லியிலிருக்கும் தன் மாமன் வீட்டுக்குப் போகவே நினைத்திருக்க மாட்டான். எப்படியாவது அவன் டில்லியில் மூன்று வாரம் தங்கியாக வேண்டும். ஒரு வாரத்துக்குள் அவன் மாமாவிடமிருந்து கடிதம் கிடைக்காவிட்டால் தாயார் தன்னைத் தேடிக் கொண்டு டில்லிக்குப் புறப்பட்டு வந்தாலும் வந்து விடலாமல்லவா?

மாமா அவன் டில்லிக்கு வரும்போது சிம்லாவில் இருப்பார் என்றும், ஆனால் இரண்டு நாளில் திரும்பி வந்து விடுவார் என்றும் எழுதியிருந்தார். மேலும் தன் 'கார்' நம்பரைக் கடிதத்தில் குறித்துவிட்டு, 'கார்' அவனுக்காக ஸ்டேஷனுக்கு வந்து காத்து நிற்கும் என்றும் எழுதியிருந்தார்.

சிவராமன் டில்லியை அடைந்தபோது அவனுக்காக மாமாவின் மோட்டார் காத்திருந்தது. காரில் ஏறி உட்கார்ந்த சிவராமனின் மனதில் பலவிதமான எண்ணங்கள் தோன்றின. முன்னால் பழக்கமில்லாத மாமி தன்னை எப்படி வரவேற்பாள்? ஒருக்கால் தான் அங்கே போனதும் "அவர் இல்லை!" என்று சொல்லிவிட்டால் அப்புறம் என்ன செய்வது? — இவ்வாறு யோசித்துக் கொண்டிருக்கும்போதே கார் ஒரு பங்களாவுக் கெதிரில் நின்றது. காரிலிருந்து இறங்கித் தயங்கித் தயங்கி பங்களாவுக்குள் சென்றான் சிவராமன்.

கார் வந்த சத்தத்தைக் கேட்டு உள்ளேயிருந்து வாசலில் வந்து நின்றவளைப் பார்த்துத் திடுக்கிட்டான் சிவராமன். அவளையும் மீறி, "நீயா என் மாமி?" என்று கேட்டு விட்டான் அவன்.

"ஆம், உள்ளே வா!" என்று அவனை வரவேற்றாள் அந்த அம்மாள்.



IODISAL
The best
BLOOD PURIFIER
MANUFACTURERS
SOUTH INDIAN MFG Co
MADURA
அயோடிசால்
மிகச் சிறந்த
ரத்த சுத்தி மருந்து
இது தேகத்தில் உஷ்ணம் அதிகரித்து அதனால் ஏற்படும் ரோகங்களை குணப்படுத்தி தேகத்திற்கு ஆரோக்கியத்தை கொடுக்கும்.
ரத்தத்தை சுத்திசெய்து ரத்த விருத்தியையும் உண்டாக்கும்.
எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்
தயாரிப்பாளர்கள்
ஸ்ரீ சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி
மதுரை
ஏஜண்டுகள்:—ராஜன் ட்ரக் ஸ்டோர்ஸ், நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்-3; சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், பெஜவாடா; கிரிஜா மெடிகல் ஸ்டோர்ஸ், பெங்களூர் ஸிடி; எம். வி. எ. ஹமீது & கோ., 20, டாம் தெரு, கொழும்பு.



'ஆஸ்ப்ரோ'
இதோ வந்துவிட்டது!
ASPRO
போலிகளை வாங்காதீர்கள். ஒவ்வொரு வில்லையின்மேலும் 'ஆஸ்ப்ரோ' என்ற வார்த்தை இருப்பதைக் கவனிக்கவும் 'ஆஸ்ப்ரோ' வலியையும் ஜுரத்தையும் 10 நிமிஷங்களில் போக்கும். இருதயத்துக்காவது வயிற்றுக்காவது கெடுதி செய்யாது
'ஆஸ்ப்ரோ'
கட்டுப்பாடு செய்யப்பட்ட விலைகள்:
3 வில்லைகள் கொண்ட பாக்கட் . . . 1 அணா
30 வில்லைகள் கொண்ட பாக்கட் . . . 10 அணா
விநியோகஸ்தர்கள்:
நேசல் மாரிசன் ஸன் அண்டு கோல்ம்ஸ் (இந்தியா) லிமிடெட்
9/10, செகண்ட் லேன் பீச், மதராஸ்
தபால் பெட்டி நெ. 1370, டெலிபோன் நெ. 6460
'ஆஸ்ப்ரோ' எங்கும் கிடைக்கும்.



கூடத்திற்குப் போய் நாற்காலி யொன்றில் உட்கார்ந்தான் சிவராமன்.

தன் கையிலிருந்த துணியில் ஏதோ நூல் வேலை செய்து கொண்டே மேஜை அருகில் நின்றாள் சிவராமனுடைய மாமி. அவளேயே சில நிமிஷம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, "ஊரிலே உன் அம்மா சௌக்கியமா? அழைத்துக் கொண்டு வருகிறதுதானே? இவரும் உன் அம்மாவை ஒரு தடவை வந்து பார்க்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார். நீ இங்கே வருவதாய் உன் அம்மா இவருக்கு எழுதினபோது, உன்னுடன் உன் அம்மாவும் இங்கே வர வேண்டும் என்று எழுதச் சொன்னேன். எழுதினாரோ?" என்று கேட்டுச் சற்று நிறுத்தினாள்.

"மாமா அப்படி எழுதவில்லை. எழுதாததும் நன்றாய்ப் போயிற்று!" என்றான் சிவராமன்.

"ஏன்?"

சிவராமன் அதற்கு மறுமொழி கூறவில்லை.

ஏதோ யோசித்துக் கொண்டே "நீ என்னை இந்த இடத்தில் இந்த மாதிரி எதிர் பார்த்திருப்பாயா? மாட்டாயே?" என்றாள் அவள்.

"எதிர்பார்க்கவில்லை. தெரிந்திருந்தால் வந்தே இருக்க மாட்டேன்!" என்றான் சிவராமன்.

அதற்கு மறுமொழி கூறாமல் சிவராமனுடைய மாமி சில நிமிஷம் வரை மௌனமாய் இருந்து விட்டு, "சரி, நீ 'பைப்' அறைக்குப் போய்க் கைகால் அலம்பிக்கொண்டு வா. உனக்குக் காப்பியும் பக்ஷணமும் எடுத்துக் கொண்டு வருகிறேன்" என்று நகர்ந்தாள்.

சிவராமன் காப்பி சாப்பிட்டு முடிந்ததும் கூஜாவையும் தட்டையும் கையிலெடுத்துக் கொண்டு உள்ளே போகப் புறப்பட்ட மாமி, "உனக்குப் பிடிக்கிற சமையலாய்ப் பண்ணச் சொல்லி யிருக்கிறேன் சமையற்காரியிடம். கூட இருந்து கவனிக்கணும். அபூர்வமாய் வந்திருக்கிறாய். நன்றாய்ச் சாப்பாடு போடாவிட்டால் காலைக்கு உன் தாயாரிடம் போய் மாமியைப் பற்றிக் குற்றம் சொல்லி விடுவாய்!" என்று கூறிச் சிரித்துக்கொண்டே உள்ளே சென்றாள்.

நாற்காலியில் உட்கார்ந்திருந்த சிவராமனுடைய காதுகளில் அந்தச் சிரிப்பு அடிக்கடி ஒலித்துக் கொண்டே இருந்தது. அது அவனைக் கேலி செய்வது போல் தோன்றியது. அந்தச் சிரித்த

முகம் அவன் மனதில் ஆழமாய்ப் பதிந்திருந்த இன்னொரு முகத்தை — ஆம், இன்று மாமியாய் இருக்கும் வத்ஸலாவின் பத்து வருஷங்களுக்கு முன்னிலிருந்த சிரித்த முகத்தை-நினைவூட்டியது. அத்துடன் அவன் மனம் பிற்காலத்தின் ஞாபகங்களில் ஈடுபட்டது.

* * *

வத்ஸலாவின் தாயார் அந்த வீட்டுச் சமையற்காரியாய் வந்து ஒரு மாதமே ஆகியிருக்கும். தகப்பனில்லாத பெண் வத்ஸலா. அப்பொழுது அவள் பள்ளியில் நான்காம் வகுப்பிலோ ஐந்தாம் வகுப்பிலோ படித்துக் கொண்டிருந்தாள். சிவராமனுடைய விளையாட்டுகளில் பங்கு எடுத்துக் கொள்வாள். அவன் கோபத்துக்காளாகி அடியும் அடிக்கடி வாங்கிக் கொள்வாள்.

இங்கிலாந்திலிருந்து 'கிரிக்கெட்' கோஷ்டி வந்து விளையாடி விட்டுப் போனதன் பயனாய் இந்தியாவின் நகரங்களிலெல்லாம் கிரிக்கெட் முழக்கம் கேட்டுக் கொண்டிருந்தது அந்த வருஷம். பெரிய மைதானங்களில் பெரிய மனிதர்கள் கிரிக்கெட் ஆடினார்கள் என்றால், சந்து பொந்துகளில் குச்சிகள் கட்டிக்கொண்டு சிறுவர் மட்டையடிக்கப் பழகினர். அந்த உற்சாகம் சிவராமனையும் பிடித்துக் கொண்டது. தினமும் காலையில் சிவராமன் கிரிக்கெட் மட்டையுடன் கிளம்பி விடுவான். வீட்டுத் தோட்டத்தின் ஓரத்தில் ஒரு சிறு வெட்ட வெளி. அதன் ஒரு புறம் சிறு கிணறு. இன்னொரு புறம் சுவர். அந்த வெளியிடம்தான் அவனுடைய கிரிக்கெட் மைதானம். வத்ஸலாதான் பந்து வீசி எறிய வேண்டும். அதை சிவராமன் அடித்தால் சில சமயம் பந்து சுவருக்கு வெளியே போய்விடும்; சில சமயம் கிணற்றுக்குள் ஸ்நானம் செய்யப் போய்விடும். எது நேர்ந்தாலும் குற்றமும் பழியும் சுமப்பவள் வத்ஸலாதான்; வசை மொழிகள் வாங்குபவளும் வத்ஸலாவே!



ஒரு முறை காலையில் வத்ஸலா ஏதோ பாடம் எழுதிக் கொண்டிருந்தாள். சிவராமன் அவளைக் கிரிக்கெட் ஆடக் கூப்பிட்டான். அவள் வர முடியாதென்றதற்கு அவளுடைய நோட்டைப் பிடுங்கி எதிரிலிருந்த வெந்நீர் அடுப்பில் எரிய விட்டு விட்டான் அவன்.

வத்ஸலா சிரித்துக் கொண்டே, "என் நோட்டுப் புஸ்தகத்தை எரித்ததாலே நீ கிரிக்கெட் ஆடின பலனாயிற்றோ? நான் இன்னொரு நோட் வாங்கி எழுதிக் கொள்கிறேன்!" என்றாள்.

சிவராமன் திகைத்துப் போனான். "நான் இப்படிப் பண்ணினதுக்கு நீ அம்மா கிட்டச் சொல்ல மாட்டாயோ?" என்றான் அவன்.

"மாட்டேன்; அதனால் என்ன லாபம்? நான் மறுபடியும் எழுத வேண்டியது எழுத வேண்டியதுதானே? நீ அடிபட்டாலும் அதில் எனக்கு என்ன லாபம்?" என்று சாந்தமாய்ப் பதில் அளித்தாள் வத்ஸலா. இப்படி அவர்களுக்குள் நிகழ்ந்த சம்பவங்கள் எத்தனை எத்தனையோ!

பல வருஷங்களுக்குப் பிறகு இன்று அவைகளை நினைத்துப் பார்த்தால் வத்ஸலாவின் மனதில் அந்தச் சிறு வயதிலிருந்தே ஏற்பட்டிருந்த பக்குவமும் அடக்கமும் வியப்பைத்தான் தந்தது. அந்த உள்ளத்தின் ஆழத்தில் உறைந்திருந்த அன்பும் நன்கு தெரிந்தது. சிவராமனுடைய முரட்டுத் தனத்துக்குப் பின்னால் மறைந்து கிடந்த அளவற்ற பாசமும் அவளுக்கு ஆச்சரியத்தை அளித்தது.

வருஷங்கள் பல ஓடின. ஆறாவது வகுப்புடன் வத்ஸலாவின் படிப்பு முடிந்தது.

ஆறு வருஷங்களில் சிவராமன் உள்ளூர் காலேஜிலேயே 'இண்டர்மீடியட்' தேறினான். இதற்கிடையே வத்ஸலா உருவிலும் உடையிலும் எவ்வளவோ மாறிவிட்டாள். முன்போல் அவள் சிவராமன் எதிரில் வருவதில்லை. சில சமயங்களில் எதிர்பாராத விதமாய் அவன் அவள் முன் வந்தாலும் அவள் வேகமாய் மறைந்து விடுவாள். அவன் இருக்கையில் அவள் அந்த அறைக்குள் நுழையமாட்டாள். ஆனால் வேறு சமயங்களில் நுழைகிறாள் என்று அவனுக்குத் தெரியும். ஒரு நாள் மத்தியானம் திடீரென்று ஏதோ புத்தகம் எடுப்பதற்காகச் சிவராமன் வீட்டுக்கு வந்தபோது வத்ஸலா அவனுடைய புத்தகங்களை அடுக்கி வைத்துக்கொண்டிருந்தாள்.

சிவராமன் தேடித் தேடிப் புத்தகம் கிடைக்காமல் "எங்கே தொலைந்ததோ? அவசரத்துக்கு அகப்பட்டால்தானே?" என்று அலுத்துக் கொண்டபோது, "இந்தா, இதுதானே?" என்று எளிதில் எடுத்துக் கொடுத்தாள் வத்ஸலா.

அவன் நன்றியுடன், "நீ இவ்வளவு உதவி செய்கிறாய், அதற்கு நான் என்ன ஈடு செய்ய முடியும்?" என்றபோது, அவள் ஒரு கணம் அவனை நிமிர்ந்து பார்த்துவிட்டு, "பெரிதாய்த்தான் எதிர்பார்க்கிறேன். ஆனால் கடவுள் கையில் இருக்கிறது!" என்று கூறிவிட்டு வெட்கத்துடன் தலை குனிந்தாள்.

இண்டர்மீடியட் தேறினதும் பி.ஏ.யில் சேர்வதற்காகச் சென்னைக்குச் சென்றான் சிவராமன். புறப்படுவதற்கு முன் தினம் இரவில் அவன் அறையில் வத்ஸலா வந்து, "ஏழை வத்ஸலாவை மறந்து விடாதே!" என்றாள்.

சிவராமன் நிறைந்த உள்ளத்துடன், "வருத்தப்படாதே! இன்னும் கொஞ்ச காலம் உன் தாயாரிடம் பொறுத்துக் கொள்ளச் சொல். நான் பி.ஏ. தேறினதும் நம் இஷ்டப்படி நடக்கும்" என்றான்.

"நீ என்னைக் கைவிடமாட்டாய் என்று நம்பிக்கை எனக்கு உண்டு" என்று சொல்லிவிட்டுக் கண்களைத் துடைத்துக்கொண்டே வத்ஸலா வெளியே சென்றாள்.

அந்தச் சம்பாஷணையை சிவராமனுடைய தாயார் கேட்டுக்கொண்டிருந்தாள் போலிருக்கிறது. வத்ஸலா, சிவராமன் அறையிலிருந்து வெளியே சென்றதும் அவனுடைய தாயார், "ஏண்டி அம்மா! கலியுகக் குணத்தைக் காட்டுகிறாயா? சூர்ப்பனகை மாதிரி என் பிள்ளையிடம் போய்க் கலியாணம் பண்ணிக்கொள்ளச் சொல்கிறாயாக்கும்? நல்ல காலம், இந்த மட்டோடு நிறுத்தினாயே? அவன் மனதைக் கலக்கி அவனோடு ஓடிப்போய் விடுவதாகச் சொல்லாமல் இருந்தாயே? கடவுள் இருக்கிறார். இல்லாவிட்டால் இந்தச் சம்பாஷணை என் காதில் விழுந்திராது. நாளைக்குக் குலம் பத்துக்குப் பேர் வாங்கி வைக்காமல் காப்பாற்றினாரே ஈசுவரன்! பதினெட்டு வயது வரை பெண்ணைக் குதிரைமாதிரி வளரவிட்டுக் கலியாணம் செய்து கொடுக்காவிட்டால்......சரி சரி உன் பாடு, உன் தாய் பாடு. நாளைக்குக் காலையில் நீங்கள் எங்கே போவீர்களோ எனக்குத் தெரியாது. என் வீட்டில் உங்களுக்கு இடம் இல்லை!" என்று இரக்கமில்லாமல் சொன்னாள். அடுத்த நிமிஷமே அவள் சிவராமனுடைய அறைக்குள் நுழைந்து, "ஏண்டா, உனக்குப் புத்தி யில்லையாடா? அவளிடம் உனக்கென்ன பேச்சு? படிக்கிற பையனா நீ?" என்று கேட்டுவிட்டு வெளியே சென்றாள்.

மறுநாள் காலையில் சிவராமன் எழுந்திருந்தபோது அவன் தலையணை அடியில் ஒரு கடிதம் இருந்தது.

அன்புள்ள அண்ணா,

"நீ என்னை மறந்து விடு. நம் இஷ்டம் ஈடேறாது. நான் ஏழை. உனக்கும் எனக்கும் இடையே என் வறுமை என்ற பெரிய மலை

கிற்கிறது. நான் ஏதாவது தப்பாகப் பேசியிருந்தால் மன்னித்துக் கொள். உன் அறையின் சுவரிலிருக்கும் உன் படத்தை நான் எடுத்துப் போகிறேன். உன் அபாக்யவதியான தங்கை.

வத்ஸலா."

என்று கடிதத்தில் எழுதியிருந்தது.

இதனால் சிவராமனுடைய பிரயாணத்துக்கு யாதொரு பங்கமும் நேரவில்லை. அன்று மாலையே சென்னைக்குப் படிக்கச் சென்றான்.

ஐந்து வருஷங்களாகின்றன. இந்த ஐந்து வருஷத்தில் சிவராமன் படித்தது, கண்டது ஆகிய பலவற்றை மறந்தான். ஆனால் வத்ஸலாவின் வதன பிம்பத்தையும் அவளுடைய கடிதத்தையும் மட்டும் அவன் மறக்கவில்லை. இப்படியிருக்கையில்தான் திடீரென்று டில்லியில் அவனுடைய மாமியாய்க் காட்சியளித்தாள் வத்ஸலா.



பரிமாறுபவர் (கிராமபோன் சங்கீதத்தை ரசித்துக் கொண்டே):— ஆஹா! பார்த்தீர்களா? பாகவதர் கல்லும் கரையும்படியாகப் பாடுகிறார்! த்ஸோ, த்ஸோ!

சாப்பிடுபவர்:— தயவு செய்து இந்தப் பிளேட்டை உங்கள் ஹோட்டல் சமையல் அறையில் தினமும் கொஞ்ச நேரம் வையுங்கள்.

—ஆர். சுந்தரராஜன்.

இவ்வாறு பழைய ஞாபகங்களில் மெய்ம்மறந்திருந்த சிவராமனிடம், "எழுந்திருந்து போய் ஸ்நானம் செய்; சாப்பிடலாம்" என்றாள் வத்ஸலா.

சிவராமன் மனதில் எழுந்த உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு, "என் மாமாவுக்கு எப்படி நீ மனைவியானாய்?" என்று கேட்டான்.

"அதுவா, உன் மாமா என் கழுத்தில் தாலி கட்டினார். நான் அவருக்கு மனைவியாகி, உனக்கு மாமியுமானேன்!"

"அது தெரியும்; ஆனால் வேறு யாருமாகாமல் என் மாமியாக நீ எப்படியானாய் என்றுதான் ஆச்சரியப்படுகிறேன்."

"சொல்கிறேன்; உங்கள் வீட்டிலிருந்து போன இரண்டு நாளில் என் தாய் ஒரு குடும்பத்துடன் பம்பாய்க்குச் செல்ல ஏற்பாடாயிற்று. அவளுடன் நானும் பம்பாய்க்குச் சென்றேன். அங்கே உன் மாமாவின் சிநேகிதர் வீட்டில்தான் என் தாயார் சமையல் வேலை செய்தாள். ஒரு நாள் ஏதோ காரியமாகப் பம்பாய்க்கு உன் மாமா வந்தார். என்னை அவருக்குக் கலியாணம் செய்து கொடுக்க நிச்சயித்தாள் என் தாய். பதினைந்தாம் நாள் கலியாணமாகி நான் டில்லிக்குப் பயணமானேன். கலியாணத்துக்கு உன்னையும் உன் அம்மாவையும் வரவழைக்க எண்ணினார் உன் மாமா. ஆனால் நான்தான் வேண்டாம் என்றேன். உன் மாமா ரொம்ப நல்லவர். கலியாணம் செய்து கொள்ளும் முன்னரே என் வார்த்தைக்கு மறு வார்த்தை சொல்லவில்லை!" என்று கூறிச் சிரித்தாள்.

சில நிமிஷம் வரை மௌனமாயிருந்த பின் வத்ஸலா, "நீ எப்போது கலியாணம் பண்ணிக்கொள்ளப் போகிறாய்? அதை ஒட்டியாவது அந்தப் பக்கம் ஒருமுறை வரலாம் என்று இருக்கிறேன்" என்றாள்.

அவளுடைய இருண்ட முகத்தையே பார்த்துக்கொண்டிருந்த சிவராமன், "என் கலியாணத்துக்குக் கட்டாயம் அழைப்பு அனுப்புவேன். நீ எனக்கு மாமியல்லவா?" என்றபோது அவன் கண்கள் கண்ணீரால் நிறைந்து விட்டன.

அதைப் பார்த்துத் தன் கண்களில் தேங்கிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டே, "அது என் பிராப்தம். நீ வீணாய் வருத்தப்படாதே! ஆனால் நான் ஒன்று சொல்லுவேன். முடியுமானால் என்னைப் போல் ஒரு ஏழையைக் கலியாணம் செய்துகொள். இப்பொழுது நீ தனியாய்ச் சம்பாதிக்கிறாய். தாயாரிடம் சொல்லிக் கொள்ளாமல் தைரியமாய்ச் செய். உன்னால் ஓர் ஏழைப் பெண்ணின் மனம் பூரிக்குமானால் அதனால் எனக்கு அளவில்லாத சாந்தி ஏற்படும்" என்றாள்.

"அப்படியே ஆகட்டும்" என்று உறுதி கூறினான் சிவராமன்.

பொல்லாத சாஸ்திரிகள்

சு. ரா.

வேதபுரி வாசிகள் விசுவநாத சாஸ்திரிகளைப்பற்றிய செய்திகளைக் கேட்டார்கள். அவர் நடத்தப் போவதாக இருந்த யாகத்திற்கு தக்ஷத்திரேசனைப் போல், பணமாகவும் அரிசி முதலிய தானியங்களாகவும், துணியாகவும் எப்படி வசூலித்து வருகிறார் என்பதையும் கேள்விப் பட்டார்கள். இந்த ரேஷன் காலத்தில் அவருக்குக் கொடுத்துக் கட்டுப்படியாகாது என்று அவர்கள் நினைத்தார்கள். ஆயினும் அவர் 'விடாக்கண்டர்' என்று அறிந்து, தாங்களும் அவருக்கேற்ற 'கொடாக்கண்டர்'களாக இருக்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

அந்த கிராமத்தில் ஒரு வீடு இருந்தது. பிசாசு வாசம் செய்யும் வீடு என்ற காரணத்தினால், அது எப்பொழுதும் பூட்டப்பட்டே கிடந்தது. அந்தப் பாழடைந்த வீட்டில் யாரோ ஓர் ஏழைப் பெண் இருந்து வந்ததாகவும், அவளுடைய பெற்றோர் அவளை ஒரு கிழவனுக்கு மூன்றாந் தாரமாகக் கல்யாணம் செய்து கொடுக்க முன்வந்ததாகவும், அதற்குச் சம்மதிக்காத அந்தப் பெண் தன்மேல் மண்ணெண்ணெயைக் கொட்டிக் கொளுத்திக் கொண்டு இறந்து விட்டதாகவும், அவள் பிசாசாகி, அந்த வீட்டுக்குக் குடி போகிறவர்கள் யாரையுமே உயிரோடு வைப்பதில்லையென்றும் சொல்லி வந்தார்கள். அந்த ஊர் வாசிகள், சாஸ்திரிகள் வந்தால் அந்த வீட்டில் இருக்கும்படி செய்வதென்றும், இரண்டாம் நாளே அவர் உபத்திரவம் தீர்ந்து விடும் என்றும் நிச்சயம் செய்து கொண்டார்கள்.

விசுவநாத சாஸ்திரிகள் குறித்த காலத்தில் வந்து சேர்ந்தார். அவரைப் பிரமாதமாக வரவேற்றனர் வேதபுரிக்காரர்கள். "சரி! நமக்கு நல்ல வேட்டைதான்!" என்று சாஸ்திரிகள் ரொம்பவும் சந்தோஷப் பட்டார். அவ்வூர் வாசிகள் அவருக்காக ஒழிந்துவிட்டிருந்த வீட்டில் போய் இறங்கினார்.

மறு நாள், "ஆசாமி காலியாகி யிருப்பார், அல்லது வீடாவது காலியாகி யிருக்கும்!" என்ற நிச்சயத்துடன், சிலர் அங்கே சென்றனர். மூடப்பட்டிருந்த கதவை யிடித்தனர்.

கதவைத் திறந்து கொண்டு, மலர்ந்த முகத்துடன் வெளிவந்த விசுவநாத சாஸ்திரிகளைக் கண்டதும் பிசாசைக் கண்டவர்கள் போல் அவர்கள் திகைத்தனர்.

"ஏன், என்ன விசேஷம்? இன்றே என் வேலையை ஆரம்பிக்கலா மென்றிருக்கிறேன்" என்றார் அவர்.

விசுவநாத சாஸ்திரிகளைப் பேட்டி காணப் போயிருந்தவர்கள் சமாளித்துக் கொண்டு, "இரவு எல்லாம் சௌகரியமா யிருந்ததா? ஏதேனும் தொந்தரவு ஏற்பட்டதா?" என்று விசாரித்தார்கள்.

"ஆமாம். ராத்திரி ஏதோ ஒரு கரிய உருவம் ஒன்று வந்து எழுப்பி என்னை மிரட்டப் பார்த்தது. அதனிடமும் யாகத்துக்கு யாசகம் கேட்டேன். அவ்வளவுதான்; உடனே அது அலறிப் புடைத்துக் கொண்டு ஓட்டம் பிடித்தது!" என்று கூறிச் சிரித்தார், அந்தப் பொல்லாத சாஸ்திரிகள்.

ஆஸ்லசேஷயம்

சரியான கேள்வி!

பெரியவர்:—உன் வயது என்ன?

பையன்:—ஆறு, மாமா!

பெரியவர்:—ஆறு வயது ஆகியும் நீ என்னுடைய குடையின் உயரம்தானே இருக்கிறாய்?

பையன்:—அப்படியானால் உங்கள் குடையின் வயது என்ன? —எம். என். கோபாலன்.

★

கமிஷன் விஷயம்!

பையன்:—டாக்டர் ஸார், நான் உம்மிடம் ஒரு நோயாளியைக் கொண்டு வந்தால் எனக்குக் கமிஷன் கிடைக்குமா?

டாக்டர்:—கிடைக்கும்; நோயாளி எங்கே?

பையன்:—முதலில் கமிஷனைக் கொடுத்து விடுங்கள்; நான்தான் நோயாளி!

—பி. ஆர். மீனாக்ஷி.

★

அவசியமில்லை

இரண்டு ரொட்டிக் கடைக்கு வியாபாரிகள் போட்டி போட்டுக் கொண்டு வியாபாரம் நடத்தினர்.

ஒரு கடையில், "இந்த ஊரில் பிரக்யாதி பெற்ற பயில்வானை சுந்தரமிங் எங்கள் ரொட்டியைச் சாப்பிடுகிறார்!" என்று விளம்பரம் மாட்டப்பட்டிருந்தது.

இரண்டாவது ரொட்டிக் கடையில், "எங்கள் ரொட்டியைச் சாப்பிடுவதற்கு யாரும் பயில்வானாக இருக்க வேண்டியதில்லை!" என்ற விளம்பரம் காணப்பட்டது!

—ஜெ. சகுந்தலா.

★

பொருத்தந்தான்!

சோமு:—என் அப்பா சீனு, நம்ம ராமு பாய் வியாபாரம் செய்தாரே, என்ன ஆயிற்று?

சீனு:—கேட்கவா வேண்டும்? படுத்து விட்டது! —என். கே. வையந் அலி.

★

பரவாயில்லை!

வீட்டுக்காரர் (குடி வருபவரைப் பார்த்து):- இந்த வீட்டில் குடி வருவதால் உங்களுக்குக் கஷ்டம் உண்டாகுமே! ஏனென்றால், வலது பக்கத்து வீட்டிலிருப்பவர் பிடில்காரர். இடது பக்கத்திலிருப்பவர் மிருதங்கக்காரர்......

குடி வருபவர்:—அதனால் பரவாயில்லை, ஐயா! நான் பாடகன்தான்! வீட்டுக்கு வீடும் ஆச்சு; பக்க வாத்தியத்துக்குப் பக்க வாத்தியமுமாச்சு! —ஏ. பார்த்தசாரதி.



இரு நண்பர்கள்

ஆசிரியர் : சுதர்சன் மொழிபெயர்ப்பு : ரா. வீழிநாதன்

நந்தகிசோர் சொல்லுகிறான் :

ரயில் புறப்படப் போவதற்கு அறிகுறியாக 'விஸில்' ஊதப்பட்டது. உடனே நாங்கள் இருவரும் பக்கத்திலிருந்த 'இண்டர்' வகுப்புப் பெட்டியொன்றில் அவசரம் அவசரமாகத் தாவி ஏறி உட்கார்ந்தோம். அதிருஷ்டவசமாக அந்த வண்டி காலியாக இருந்தது. நான் கதவின் அருகில் நின்று கொண்டு ஸ்டேஷன் லாந்தர் கம்பங்களைக் கவனிக்கலானேன். வண்டி பிளாட்பாரத்தைத் தாண்டியதும் நான் கதவைச் சாத்திவிட்டு, ரூபாராணிக்கு எதிரேயுள்ள 'ஸீட்'டில் உட்கார்ந்து கொண்டேன். என் மார்பு 'பட் பட்' என்று அடித்துக் கொண்டிருந்தது. அந்த ஒலி என் காதுகளில் மிகத் தெளிவாக விழுந்தது.

ரூபாராணி பத்திரிகை படித்துக் கொண்டிருந்தாள். நான் உட்காருவதைப் பார்த்ததும் அவள், "அஸெம்பிளி ஆரம்பமாகி விட்டது!" என்றாள்.

என் மனம் அஸெம்பிளியைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கவில்லை. பகவானாகப் பார்த்துக் கொடுத்திருக்கும் இந்த நல்ல சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு, ரூபாராணியிடம் மனதைத் திறந்து காட்டி, அவள் உள்ளத்தில் எப்படியாவது இடம் பெற வேண்டும் என்ற சிந்தனையில் லயித்திருந்தது. ஆம், உண்மையில் இதை விட நல்ல சந்தர்ப்பம் வேறு எங்கே கிடைக்கப் போகிறது? என் நண்பர்கள் எல்லாரும் எனக்கு 'வாயாடி' என்ற பட்டம் சூட்டியிருந்தனர். அந்த 'வாயாடி'ப் பட்டம் எனக்கு இங்கே எவ்வளவு தூரம் உதவி செய்யப் போகிறதோ தெரியவில்லை. யுத்தகளத்தில் உதவும் உடைவாள்தானே உண்மையான வாள்? கண்காட்சிச் சாலையில் வைப்பதற்கு மரத்தினால் செய்யப்பட்டதாயிருந்தால் என்ன, இரும்பினால் செய்யப் பட்டதாயிருந்தால்தான் என்ன, இரண்டும் ஒன்றுதானே?

"இத்தருணம் தப்பினால் வேறு தருணம் வாய்ப்பது அரிது. இரவு நேரம்; தனிமை வேறு; அது மட்டும் அல்ல, ஓடும் ரயிலில் உட்கார்ந்திருக்கிறோம். நாம் இப்பொழுது என்ன சொன்னாலும் அவள் கேட்டுத்தான் ஆகவேண்டும்! எழுந்து எங்கும் போய் விட முடியாது; 'பேசாதே!' என்று என்னைத் தடுக்கவும் இவளால் ஆகாது. லக்னோவுக்குப் போய் விட்டால், இது மாதிரிச் சந்தர்ப்பம் கிடைப்பது ஏது? இந்தச் சந்தர்ப்பம் கிட்டியதே என் அதிர்ஷ்டம். இதை நழுவ விடக்கூடாது!" என்று மனத்துள் தீர்மானித்துக் கொண்டேன். ஆனால் அவளோ பத்திரிகை படித்துக் கொண்டிருந்தாள்; நானோ பேச்சை ஆரம்பிக்கத் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தேன். 'பத்திரிகையைப் பிடுங்கி எறிந்துவிட்டு, என் மன வேதனையைச் சொன்னால் என்ன!' என்று கூடத் தோன்றியது. என்ன நெஞ்சழுத்தம் இவளுக்கு? 'வாழ்வதா, சாவதா?' என்ற சிக்கலான பிரச்னையில் என் மனம் குழம்பிக் கொண்டிருக்கிறது; இவள் என்னடாவென்றால் கவலையற்றுப் பத்திரிகை படித்துக் கொண்டிருக்கிறாளே!

கடைசியில் நான் பொறுமை யிழந்து, அவள் பக்கம் சற்றுக் குனிந்து, சிறிது உரக்கவே, "ஆமாம், தங்களுடன் வம்பு பேசிப் பொழுதைப் போக்கலாம் என்று எண்ணினால் தாங்கள் பத்திரிகையை

எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டீர்களே!" என்று கேட்டேன்.

அவன் பத்திரிகையைப் படித்தவாறே என்னைத் திரும்பிக்கூடப் பாராமல், "இன்றைய தலையங்கம் இருக்கிறதே, வெகு ஜோர்! அதை முடித்துவிட்டு வந்து விடுகிறேன். சற்று இருங்கள்!" என்றான்.

"ஊமைக் கோட்டான் மாதிரி நான் உட்கார்ந்திருக்க வேண்டியிருக்கிறது. நீங்கள் தலையங்கம் படிக்க உட்கார்ந்து விட்டீர்கள். போதும், அப்புறம் படியுங்கள்!" என்று சொல்லி அவன் கையிலிருந்த பத்திரிகையைப் பிடுங்கி என் 'வீட்'டில் வைத்துக் கொண்டு விட்டேன்.

ரூபாராணி பத்திரிகையைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் தன் அழகிய கரத்தை நீட்டி, "இன்னும் ஒரே ஒரு 'பாரா'தான் பாக்கி. இரண்டே இரண்டு நிமிஷத்தில் அதைப் படித்து முடித்து விடுகிறேன்!" என்றான்.

"ஓடுகிற வண்டியில் படித்தால் கண் கெட்டு விடும். தரமாட்டேன்!" என்றேன்.

"ஓடும் வண்டியில் படித்து எனக்குப் பழக்கம் உண்டு. அதனால் என் கண் கெடாது!"

நான் பத்திரிகையின்மீது கையை ஊன்றிய வண்ணம் விளக்கைப் பார்த்துக் கொண்டே, "வெளிச்சம் ரொம்பக் குறைவாக இருக்கிறது. இந்த வெளிச்சத்தில் படித்தால் கட்டாயம் கண் கெட்டுத்தான் போகும். நான் நல்லதைத்தானே சொல்லுகிறேன்?" என்றேன்.

"இதுமாதிரி நீங்கள் பிடிவாதம் பிடிப்பது எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை!"

"பிடிக்காவிட்டால் போகிறது. நான் பத்திரிகையைத் தரவே முடியாது."

"தராவிட்டால் வேண்டாம். இந்தச் சின்ன விஷயத்துக்காக உங்களிடம் தர்க்கம் செய்வானேன்?" என்றான்.


என் பேச்சைத் தொடங்க எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என்று சில நிமிஷங்கள் யோசித்தேன். கடைசியில் வழியும் தோன்றி விட்டது. "ஆமாம், இந்த வித்யாசங்கர் ஏன் இப்படி ஒரேயடியாக மாறிவிட்டான்? யாரைக் கண்டாலும் 'சள்'ளென்று விழுகிறானே? அவனுக்கு நல்லதைச் சொன்னாலும் கெடுதலாக எடுத்துக் கொள்ளுகிறான். என்ன காரணம் என்று புரியவில்லையே!" என்று ஆரம்பித்தேன்.

ரூபாராணி, உள்ளத்தை ஊடுருவும் சக்தி வாய்ந்த தன் பார்வையால் என்னை ஒரு முறை நோக்கினான். பிறகு நீண்ட பெருமூச்சு விட்ட வண்ணம், "வித்யா சங்கர் முன்போல இல்லவே இல்லை. முன்னெல்லாம் எப்பொழுது பார்த்தாலும் சிரித்த முகமாகவே இருப்பார். எதற்கெடுத்தாலும் வேடிக்கை வேடிக்கையாகப் பேசி எல்லாரையும் சிரிக்க வைத்துக் கொண்டிருப்பார். இப்பொழுது என்னவென்றால் ..." என்று ஆரம்பித்தான்.

"எப்பொழுது பார்த்தாலும் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு வருத்தமாகவே இருக்கிறான்; யாருடனும் பேசுவதில்லை."

"என்னவோ ஒரேயடியாக ஆள் மாறி விட்டார். அதுதான் நமக்குத் தெரிகிறது."

"ஒரு வேளை உடம்பு-கிடம்பு சரியாயில்லையோ, என்னவோ! இல்லாவிட்டால் ஆள் இப்படித் 'திடுதிப்' பென்று எப்படி மாறிவிடுவான்? காலேஜில் எங்கே பார்த்தாலும் அவன் இப்படி மாறி விட்டதைப் பற்றித்தான் பேச்சாயிருக்கிறது. ஆமாம், உங்களிடமாவது அவன் பேசுகிறானா? இல்லை, அதுவும் நின்று விட்டதா?" என்று வருத்தம் தோய்ந்த பாவனையில் கேட்டேன்.



ரூபாராணியின் சிவந்த முகத்தில் துயரம் என்னும் கார்முகில்கள் சூழ்ந்தன. சிறிது நேரம் வரை அவள் வண்டிக்கு வெளியே இருட்டைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு அடி வயிற்றிலிருந்தே எழும்புவது போன்ற ஒரு பெரு மூச்சை விட்டவாறு, "என்னுடன் கூடப் பேசுவது இல்லை!" என்றாள்.

எங்கள் சம்பாஷணை வெகு சுவாரஸ்யமான—ஆனால் வெகு சிரமமான—கட்டத்தை அடைந்தது. நான் ஒவ்வொரு வார்த்தையாக நிறுத்தி நிதானமாக, "ஆமாம், நான் ஒரு சமாசாரம் கேள்விப் பட்டேன். அதாவது உங்கள் அப்பா..." என்று ஆரம்பித்தேன். ஆனால் அதற்கு மேல் ஒரு வார்த்தைகூட என் நாவிலிருந்து எழவில்லை. வாக்கியம் அரை குறையாகவே தான் முடிந்து விட்டது. ஆனால் அதன் பொருள் மட்டும் அரை குறையாக இல்லை.

ரூபாராணியின் முகத்தில் மறுபடியும் துயரச் சாயல் படிந்தது. தரையை நோக்கியவாறே, "கிசோர்பாபு, இந்தப் பேச்சை இப்படியே நிறுத்திவிடுவதுதான் நல்லது என்று எனக்குப் படுகிறது!" என்றாள்.

"உங்களுக்கு இப்படி மனக் கஷ்டம் ஏற்படும் என்று தெரிந்திருந்தால் நான் பேசியே இருக்கமாட்டேன். ஆனால்...நான் ...சொல்ல விரும்பியது...என்னவென்றால் ...அதாவது உங்களுக்கு...நான் சொல்வது ...தடை யொன்றும் இல்லை யென்றால்... நான்...என்னைப் பற்றி...கொஞ்சம்...அதாவது...இரண்டொரு வார்த்தைகள்...... ஆமாம்...இரண்டே இரண்டு வார்த்தைகள்..." என்று ஏதோ உளறிக் கொட்டினேன்.

ரூபாராணி தன் கைக் கடிகாரத்தைச் சரி பண்ணிக் கொண்டவாறு "சொல்லுங்கள்..." என்றாள்.

"நீங்கள் தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டீர்களே......?" என்று இழுத்தேன்.

"இதற்கு நான் என்ன செய்வது? தப்பாக எடுத்துக்கொள்ளக் கூடிய விஷயமாக இல்லாவிட்டால் கட்டாயம் தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டேன். ஆனால் நீங்கள் பேசுகிறதைப் பார்த்தால் ஏதோ ரொம்ப முக்கியமான விஷயம் போலத் தான் தோன்றுகிறது!"

"ஆமாம், முக்கியமான விஷயம். இல்லை யென்றால் இவ்வளவு பெரிய பூர்வ பீடிகை என்னத்திற்கு?" என்றேன் நான்.

ரூபாராணி ஒன்றும் பதில் சொல்லவில்லை.

நான் ஏற்கெனவே என் மனத்துள் நீண்டதொரு பிரசங்கத்தையே தயார் செய்து வைத்திருந்தேன். பேச்சை எப்படி ஆரம்பிக்க வேண்டும், எதற்குப் பிறகு எதைச் சொல்லவேண்டும், எந்த இடத்தில் பேச்சை மாற்றி நம் சொந்த விஷயத்துக்கு வர வேண்டும், எப்படி யெல்லாம் நம் மன நிலையை வருணித்தால் அவள் நம்மீது இரங்குவாள் என்றெல்லாம் முன் கூட்டியே யோசித்து வைத்திருந்தேன். கடைசியாக, அவள் எதற்கும் மசியா விட்டால், அவளுடைய காலடிகளிலேயே தலை வணங்கிவிடுவது என்றுகூட முடிவு கட்டி யிருந்தேன். ஆனால் ஏனோ ஒரு வார்த்தை கூட வாய் திறந்து என்னால் பேச முடியவில்லை. வாய் ஊசியால் தைத்துவிடப்பட்டது போலாகிவிட்டது. கடைசியில் சிரமப் பட்டு, "நான் உங்களைக் காதலிக்கிறேன்" என்று தட்டுத் தடுமாறியவாறு சொல்லி முடித்தேன். நன்றாக எல்லா விஷயங்களையும் உருப் போட்டு வைத்திருந்த மாணவன் ஒருவன், பரீட்சைத் தாளைக் கண்டதும் எல்லாவற்றையும் மறந்து ஒன்றும் தெரியாமல் விழிப்பது போன்று என் நிலைமையும் ஆகிவிட்டது.

"நான் உங்களைக் காதலிக்கிறேன்" என்று சொல்லும்பொழுதே என் கண்கள் கீழே கவிழ்ந்து விட்டன.

சிறிது நேரம் கழித்து வெகு பிரயாசையுடன் தலை நிமிர்ந்து ரூபாராணியைப் பார்த்தேன். அவள் ஓர் அர்த்தமும் இல்லாத பார்வையுடன் என் தலைக்குமேல் இருந்த பலகையை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கவனம் என்மீது இல்லை என்பது மட்டும் நிச்சயமாகத் தெரிந்தது.

நான் வெகு சிரமத்துடன் முன்னால் சொன்ன அந்த ஒரு வாக்கியத்துக்கு வியாக்கியானம் செய்யும் முறையில், "நான் தூங்கும்பொழுதெல்லாம் உன்னைப்பற்றித் தான் கனவு காண்கிறேன், விழித்துக் கொண்டிருக்கும் பொழுதெல்லாம் கூட உன்னைப் பற்றியேதான் சிந்திக்கிறேன். காலேஜில் உன்னைப் பார்க்கும் பொழுதெல்லாம் அரும்பெரும் பொக்கிஷம் எனக்குக் கிடைத்து விட்டது போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது........." என்று ஆரம்பித்து விட்டேன்.

என் வார்த்தைகள் முடியும் முன்னரே, 'சட்'டென்று ரூபாராணி எழுந்து நின்றாள்;

"என் உள்ளத்தில் உங்களைப் பற்றி இம்மாதிரி யெல்லாம் சிந்தனையெழவில்லையே! நான் என்ன செய்வது?" என்றான்.

என் உள்ளத்தை யாரோ சுத்தி கொண்டு அடிப்பது போலிருந்தது. ரூபராணியின் மேற்கூறிய வார்த்தையினால் ஏற்பட்ட மனக் கஷ்டம்போல, உண்மையாகவே யாராவது சுத்தி கொண்டு அடித்திருந்தால்கூட எனக்கு ஏற்பட்டிருக்காது. என்னை யறியாமலே என் கண்கள் நீரைக் கக்கி விட்டன. ஏமாற்றத்தினால் உண்டான அந்த ஆத்திரத்தில், "நான் என்ன, வித்யாசங்கரைவிடக் கெட்டவனா? எந்த விஷயத்தில் அவன் உனக்கு மேலாகப் படுகிறான்?" என்று அவளைக் கேட்டு விட்டேன்.

அந்தச் சமயத்தில் ஏதோ ஆத்திரத்தில் உளறிக் கொட்டி விட்டேன். ஆனால் இன்று ஆற அமர, சிந்தித்துப் பார்க்கும் பொழுது மடத்தனமாக இப்படி வார்த்தைகளைக் கொட்ட எனக்கு எப்படித்தான் மனம் வந்ததோ என்று ஆச்சரியமாயிருக்கிறது. நான் எங்கே, வித்யாசங்கர் எங்கே? மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் அல்லவா, அவனுக்கும் எனக்கும்? அவனிடமிருக்கும் அந்தப் பெருந்தன்மை, அந்த யோக்கியதை, அந்த உன்னத நோக்கம் எல்லாம் என்னிடம் ஏது? அவனுக்கு முன்னிலையில் நான் ஓர் அற்பன்; நீசன்; உதவாக்கரை. ஆனால் அப்பொழுது 'எந்த விஷயத்தில் அவன் உனக்கு மேலாகப் படுகிறான்?' என்று கேட்க எப்படித்தான் எனக்குத் துணிவு ஏற்பட்டதோ, தெரியவில்லை.

ரூபராணி என் அறியாத்தனத்தைக் கண்டு ஏளனமாகச் சிரித்தவாறு, "அவர் உங்களைவிட மேலானவர்தான். இந்தத் தடவை அவர் 'யுனிவர்ஸிடி'யிலேயே முதலாவதாகத் தேறப் போகிறாரே, உங்களால் முடியுமா? நீங்கள் தேறுவீர்களோ மாட்டீர்களோ, அதுவே சந்தேகமாச்சே?" என்று கேட்டாள்.

"யுனிவர்ஸிடியில் முதலாவதாகத் தேறி விடுவது என்பது ஒன்றும் பெரிய காரியமில்லை. எதையும் வாயால் சுலபமாகச் சொல்லி விடலாம், காரியத்தில் செய்து காட்டுவது தான் கடினம். அவன் சொல்கிறானே என்று எதையும் நம்பிவிட முடியுமா?"

"அவர்தான் 'நான் முதலாவதாகத் தேறவில்லை என்றால் என் பெயரை வேண்டுமானாலும் மாற்றி அழையுங்கள்' என்று சொல்லுகிறாரே?"

"சொன்னால் என்ன? அப்படித் தேறாமல் போய்விட்டால் எவ்வளவோ சால்ஜாப்புகள் சொல்லித் தப்பித்துக் கொள்ளுகிறான்!"

"நீங்கள்தான் அவர் மீது வீணாகச் சந்தேகப் படுகிறீர்கள். அவர் அப்படிப்பட்டவர் இல்லை. எந்த விஷயமும் அவருக்குக் கடினமான தல்ல. உங்களிடத்திலும் அவரைப்போல் தன்னம்பிக்கை இருக்குமானால் நீங்களும் தாராளமாகப் பரீட்சையில் முதலாவதாகத் தேற முன்வரலாமே! உங்களால் முடியுமா?"

"நீங்கள் மட்டும் உற்சாக மூட்டுகிறேன் என்று சொல்லுங்கள், நான் பகீரதப் பிரயத்தனம் செய்தாவது முதலாவதாகத் தேறி விடுகிறேன்!"

ரூபராணி சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தாள். பிறகு, "நீங்கள் 'யுனிவர்ஸிடி'யிலேயே முதலாவதாகத் தேறினால் எனக்குத் தங்களைக் கல்யாணம் செய்து கொள்வதில் எவ்விதமான ஆட்சேபணையும் இராது!" என்றாள்.


அவ்வளவுதான்; அடுத்த கணம் என் மனக் கண் முன்னால் நம்பிக்கை என்னும் சோலை 'பச்சைப் பசேல்' என்று காட்சி அளித்தது.

"ஆமாம், உங்கள் அப்பாவுக்கு ஒன்றும் ஆட்சேபணை இராதே?" என்று கேட்டேன்.

ரூபராணி ஒரு கள்ளச் சிரிப்புச் சிரித்து விட்டு, "அவருடைய மனதை நான் எப்படி அறிய முடியும்? ஆனால் எப்படியாவது அவரையும் சம்மதிக்கச் செய்து விடுகிறேன். போதுமோ, இல்லையோ?" என்றாள்.


"உங்களுக்கு நான் எழுதி வேண்டுமானாலும் தருகிறேன், இந்தத் தடவை பரீட்சையில் நான்தான் முதல்!" என்று என் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடக் கூறினேன்.

ஒன்றரை மணி நேரத்துக் கெல்லாம் வண்டி லக்னோவை அடைந்தது. மகிழ்ச்சி வெறியில் மூழ்கியிருந்த எனக்கு உலகமே ஒரு இன்பச் சோலையாகத் தோற்றம் அளித்தது. அதன் ஒவ்வொரு வஸ்துவும் இன் முகத்துடன் ஆடிப்பாடிக் கொண்டு என்னை வரவேற்பது போன்ற உணர்ச்சியில் நான் மூழ்கிவிட்டேன். (தொடரும்)



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press, 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.

கல்கி



ALKI பிப்ரவரி ௨, 1947 4 அணா

ஜலதோஷத்தினால் வேலை பாதிக்கப்பட்டதா?

30 விநாடியில் நிவாரணம் அடையுங்கள்





ஜலதோஷத்தினால் கஷ்டமும் இடைஞ்சலும் அடையாதீர்கள். கர்ஸோட்ரைன் மூலம் உடனே நிவர்த்தி பெறுங்கள். படத்தில் காட்டியுள்ளதுபோல் குழாய் நுனியை ஒவ்வொரு நாசித் துவாரத்திலும் வைத்து இரண்டு தடவை சுவாசத்தை உள்ளிழுங்கள். பல மூலிகைகள் சேர்ந்த கர்ஸோட்ரைன் ஆவி ரூபமாக உள்ளே சென்று மூக்கினுள் வீங்கிய மெல்லிய தோலை சுருங்கச் செய்து சளியையும் காயச் செய்கிறது. கஷ்டத்துக்குக் காரணமான மூல இடத்தையே கர்ஸோட்ரைன் தாக்குவதால் நிச்சய நிவாரணம் அளிக்க சாத்தியமாகிறது. ஜலதோஷம், கபம், குளிர்ஜுரம், தலைபாரம் முதலியவைகளுக்கு முற்றிலும் சிபார்சு செய்யப்படுவது. எல்லா கெமிஸ்டுகளிடமும் கிடைக்கும்.

கர்ஸோட்ரைன்

பர்ஸிலும் பாக்கெட்டிலும் எளிதாகக் கொண்டுபோகக் கூடிய இன்றியமையாத குழாய்.



இங்கிலாந்தில்
E. க்ரிப்பித் ஹ்யூஸ்
லிமிடெட்டாரால் தயாரிக்கப்பட்டது

K.S.D. 2

மங்கையர்களின் முக விலாசத்திற்கே

அர்ப்பணம் செய்யப்பட்டது.



ஜாப்கோ ஸ்னோ

உங்கள் எழிலை அதிகப்படுத்த இதைவிடச் சிறந்தது வேறெதுவும் இல்லை

•

ஜயபாரதம் கோ.,
மல்லேஸ்வரம் - பெங்களூர்

REGD. NO. M. 4392

